


# திருவண்டப் பகுதிக் கதைகள்

கே. வீ. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



# என்னுரை

திருவாசகத்தில் திருவண்டப்பகுதி மிகவும் முக்கியமானது. இந்தப் பிரபஞ்சத்தில் எண்ணிறைந்த அண்டங்கள் உள்ளன. அவையாவும் சிவனின் உடலாக அமைந்தன. அதனால் அவற்றைத் திரு அண்டம் என அழைப்பர். அண்டம் உருண்டை என்ற பொருளை உடையது. இதற்குக் கதை எழுதுவது மிகவும் சிரமமானது. சிவனாரின் அருளால் எழுதிமுடித்துள்ளேன். இதுவரை காலமும் உரையைப் படித்துவிட்டுப் பொருள் விளங்காது படித்த சிவனடியார்கள் இதைப் படித்தபின் பொருளை விளங்கிப் படிக்கலாம். பொருளை விளங்கிப் படிப்பவர்கள் தான் சிவனடியை அடைவார்கள் என்று சிவபுராணத்தில் மாணிக்கவாசகர் கூறுகிறார். அதனால் இக்கதைகளைப் படித்துவிட்டுத் திருவாசகத்தைப் படியுங்கள். கட்டாயம் சிவனருளைப் பெறுவீர்கள். அந்தப் பெருமை சிவனருளால் எனக்குக் கிடைத்துள்ளது. மீண்டும் சந்திப்போம்.

நன்றி.

**கே. வி. குணசேகரம்**

உ

சிவமயம்

# திருவண்டப் பகுதிக் கதைகள்

## தில்லையில் அருளியது

சிவபெருமானிடமிருந்து பஞ்சபூதங்களும், எண்ணிறைந்த அண்டங்களும் உண்டாயின. அவையாவும் சிவனின் உடல்கள் ஆகும். அதனால் அவற்றைத் திருவண்டம் என அழைக்கப்படுகிறது. அண்டம் என்ற சொல் உருண்டை அல்லது கோளவடிவம் எனப் பொருள்படுகிறது.

**1) அண்டம் பகுதியின் உண்டைப் பிறக்கம்**

**2) அளப்பு அரும் தன்மை வளம் பெரும் காட்சி**

அண்டம் மிகவும் பிரமாண்டமானது. கணக்கிட முடியாத கோளங்களை உடையது. அக் கோளங்களைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள முடியாது. ஆராயுமிடத்து அவை அழகும், சீரமைப்பும் வியப்பதற்குரியனவாகவே உள்ளன.

**3) ஒறனுக்கு ஒன்று நின்று எழில் பகரின்**

**4) நூற்றுக்கு ஒரு கோடியின் மேல்பட விரிந்தன**

ஒவ்வொரு கோளமும் மிக்க அழகுடையது. விளக்கமாகக் கூறுவதானால் கோடிக்கணக்கில் அவை விரிந்து பரந்துள்ளன.

**5) இல் நுழை கதிரின்துன் அணுப்புடைச்**

**6) சிறிய ஆகப் பெரியோன் தெரியின்**

ஓலையால் வேயப்பட்ட வீட்டின் ஒரு துவாரத்தில் இருந்து சூரியவெளிச்சத்தில் அணுப்போன்ற தூசிகள் மிதப்பது தென்படுகிறது. அது போலக் கோளங்கள் வானில் மிதந்து கொண்டிருக்கின்றன. சிறியதாகிய அணுவுக்கும் பெரியதான அண்டங்களுக்கும் அமைப்பு ஒன்றேயாகும். ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு இவ் உண்மை புலனாகும். காற்றில் மிதந்து கொண்டிருக்கும்

தூசிகளைப் போலவே பூமி, சந்திரன், சூரியன் போன்ற கோளங்களும் உள்ளன. தூசிகள் எவ்வாறு அற்பமானவைகளாகத் தோன்றுகின்றனவோ, அது போலக் கோள்கள் சிவனுக்கு அற்பமானவை. ஏனென்றால் அவற்றைப் படைத்தவர் சிவன். காப்பவர் சிவன். பின் அழிப்பவரும் சிவன். இவற்றை உணர்ந்தவர்கள் தமது உடலைப்பற்றியோ, தம் வாழ்க்கையைப் பற்றியோ, நிலவுலகில் உள்ள உடைமைகளைப் பற்றியோ எண்ணமாட்டார்கள். அவை அவர்களுக்கு அற்பமானவையாகவே இருக்கும். கதிரேசனிடம் ஏக்கர் கணக்கில் வயல்கள் உண்டு. தென்னந் தோப்பு உண்டு. வீடுகள் உண்டு. தோட்ட நிலம் உண்டு. அவர் ஒரு பெரிய கோடீஸ்வரர். எல்லாவற்றையும் பிள்ளைகளுக்குக் கொடுத்து விட்டார். பிள்ளைகள் வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்புவதால் அவற்றை விற்க அனுமதி கேட்டனர்; “என்னிடம் எதுவும் இல்லை. எதைப்பற்றிய கவலையும் இல்லை. ஆச்சிரமத்தில் தங்குவதையே நான் விரும்புகிறேன். நீங்கள் உங்கள் விருப்பப்படி செய்யுங்கள்” என்றவர். இறைநினைவுள்ளவர்களுக்கு இறைவனைப் பற்றிய நினைவைத் தவிர வேறு எதுவும் வராது தெரியாது.

**7) வேதியன் தொகையொடுமால் அவன் மிகுதியும்**

**8) தோற்றமும் சிறப்பும் ஈற்றொடு புணரிய**

**9) மாப்பேர் ஊழியும் நீக்கமும் நிலையும்**

எண்ணிறைந்த பிரமாக்களும், அவர்களுக்கெல்லாம் தலைவனாக விட்டுணுவும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களும் சிவனது அருட்செயல்களாகும். பிரளயத்தின்போது சிவனைத்தவிர ஏனைய தேவர்களெல்லாம் அழிக்கப்படுகின்றனர். பின் சிவன் எல்லோரையும் தோற்றுவிக்கின்றான். கதிரேசன் தனது பிள்ளைகளுக்குச் சொன்னார்; “மகனே, யாவும் சிவனால் படைக்கப்பட்டவை. அவற்றைச் சிவன் பிரளயகாலத்தில் அழிக்கிறான். உயிர்கள், அண்டங்கள் யாவும் பிரளயத்திற்கு முன் சிவனுள் ஒடுங்குகின்றன. பின் அவனிடமிருந்து வெளிப்படுகின்றன. அப்படிப் பார்க்கும்போது ஒன்றும் யாருக்கும் சொந்தமில்லை. நாகநாதனின் மகன் சகோதரனுடன் காணிப் பிரச்சினையில் சண்டையிட்டான். இருவரும் இறந்து விட்டனர். இருவருக்கும் பிள்ளைகள் இல்லை. அதனால் அவர்கள் சண்டையிட்ட நிலத்தில் யாரோ ஒருவன் குடியிருக்கிறான். நான் பலரிடம் வாங்கினேன். உங்களுக்குத் தந்தேன். இனி என்னவும் நடக்கட்டும்” என்றவர்.

**10) சூக்கமொடு தூலத்துக் சூறைமாருதந்து**

**11) ஏறியது வளியின்**

**12) கொட்கப் பெயர்க்கும் குழகன் முழுவதும்**

சுழல்காற்று வீசும்போது அதனுள் அடங்கியிருக்கும் சிறு காற்றும் சுழன்று இடம் மாறுகிறது. அவ்வாறே சிவனது தோற்றத்தினுள் இருக்கின்ற சிறுதெய்வங்கள் அவரின் அனுமதியுடன் அவரவரின் தொழில்களை முறையாகச் செய்து வருகின்றன. அவ்வாறு செய்யப்படும் தொழில்கள் சூட்சுமநிலையில் இருந்து ஸ்தூலநிலையில் நிகழ்ந்து வருகின்றன. சிவன் மாறாத தன்மையுடையவர். அதனால் அவர் எப்போதும் ஒரே நிலையில் வீற்றிருக்கிறார்.

**13) படைப்போன் படைக்கும் பழையோன் படைத்தவை.**

**14) காப்போன் காக்கும் கடவுள் காப்பவை**

**15) கரப்போன் கரப்பவை கருதாக்**

**16) கருத்துடைக் கடவுள் திருத்தரும்**

அனைத்தையும் படைப்பவனான பிரமன் தொல்லோன் எனப்படுகிறான். படைக்கப்பட்டவற்றைக் காப்பவன் திருமால். காக்கப்படுபவற்றை அழிப்பவன் உருத்திரன். முத்தொழில்களிலும் தனது கருத்தைச் செலுத்தாது அதீதத்தில் இருப்பவன் சிவன். சிவனின் ஆணைப்படி மும்மூர்த்திகளும் தமது தொழில்களைச் செய்கின்றனர். சிவனுக்கு வடிவம் இல்லை என்பதற்குச் சிவலிங்கம் சின்னமாக இருக்கின்றது. பிறப்பும் இறப்பும் இல்லாத சிவன் எங்கும் நிறைந்திருக்கின்றார். பிரளயத்தின்போது எல்லாம் சிவனிடம் ஒடுங்கிப்பின் அதிலிருந்து வெளிவருவதால் சிவத்தைத் தவிர மற்றெல்லாவற்றிற்கும் பிறப்பும் இறப்பும் உண்டு. விளக்கம் மிக்க பேரொளி ததும்பும் மணிமுடியை அணிந்தவன் சிவபெருமான். அவனே உலகின் முதல்வன். அவன் அயன், அரி என்னும் இருவரினதும் எலும்பினையும், மண்டையோட்டினையும் கோர்த்து மாலையாக அணிந்தவன். அவ்வாறு அவன் அணிந்தது தன்னைத் தவிர வேறு எவரும் அழிவில் இருந்து தப்பமாட்டார்கள் என்பதைக் காட்டுவதற்காகும். அவனைத் தவிர்ந்த ஏனைய மண்ணவர், விண்ணவர் அனைவரும் பிறந்திறப்பவர்களே.

சிவபெருமான் அம் மண்டையோட்டினையும், எலும்பையும் அணியாதிருந்தால் அவை இற்று மண்ணோடு மண்ணாகியிருக்கும். சிவபெருமானின் கருணையினால் அழியும் மாயாகாரிய பொருட்கள் அழியாதிருக்கும். காரண மாயையானது என்றும் அழிவடையாது சிவபெருமானில் தங்குதலில் நிற்கும் என்பதாம்.

**17) அறுவகைச் சமயத்து அறுவகை யோர்க்கும்**

**18) வீடுபேறு ஆய் விண்ணோர் பகுதி**

**19) கீடம் புரையும் கிழவோன் நாள் தொறும்**

‘‘சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் ஆகிய ஆறு மதங்களும், வேதங்களைப் பின்பற்றுபவை. இவ் ஆறு மதங்களில் ஒன்றைப் பின்பற்றுபவன் ஆத்திகன். இவற்றைப் பின்பற்றாதவன் நாத்திகன். இவ் ஆறு சமயங்களைப் பின்பற்றுவோருக்கு முத்தியைக் கொடுப்பவர் சிவன். தேவர் கூட்டம் வரை படைக்கப்பட்ட உயிர்களுக்கெல்லாம் எல்லாவற்றையும் கொடுப்பவர் சிவன். சிவன் அவற்றையெல்லாம் சமமாகவே கருதுகிறார்” என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னபோது மகாலிங்கம் கேட்டார்; “சுவாமி சிவனைத் தவிர வேறு தெய்வங்களுக்குச் சக்தி இல்லையென்பதாலா சிவன் அவர்களுக்கு முத்தியைக் கொடுக்கிறார்” சுந்தரமூர்த்தி சுவாமிகள் மகாலிங்கம் அப்படிக் கேட்டதும் சற்றுத் தடுமாறிப் போனார். பின் சொன்னார்; “மேற் சொல்லப்பட்ட மதங்களின் தெய்வங்களாகச் சிவன், விட்டுணு, அம்மை, முருகன், பிள்ளையார், சூரியன் என்போர் விளங்குகின்றனர். பிள்ளையாரும், முருகனும் சிவனின் அவதாரங்கள். அம்மையைச் சிவனைவிட்டுப் பிரிக்க முடியாது. சூரியனாகத் திகழ்பவன் சிவபெருமான். விட்டுணு சிவனின் ஆணைப்படி நடப்பவன். அவர்களுக்குச் சக்தியைக் கொடுப்பவர் சிவன். அதனால்போலும் மாணிக்கவாசகர் அவ்வாறு கூறியுள்ளார். இதற்கு மேல் விளக்கம் சொல்ல முடியாது. அது சிவதத்துவம்” என்றார்.

**20) அருக்கனில் சோதி அமைத்தோன் திருத்தகு**

**21) மதியில் தண்மை வைத்தோன் திண்திறல்**

**22) தீயில் வெம்மை செய்தோன் பொய்தீர்**

**23) வானில் கலப்பு வைத்தோன் மேதகு**

**24) காலின் ஊக்கம் கண்டேன் நிழல் திகழ்**

சிவன் சூரியனாக இருந்து வெப்பத்தைத் தருகிறான். அழகான சந்திரனாக இருந்து குளிர்மையைத் தருகிறான். தீயாக இருந்து வெப்பத்தைத் தருகிறான். அதுபோல ஆகாயமாக இருந்து வியாபாகத்தைத் தருகிறார். காற்றாக இருந்து நடத்தல் என்னும் வேகத்தைக் கொடுத்துள்ளான். அண்டங்களில் காணப்படும் தோற்றங்களெல்லாம் சிவனின் தோற்றங்களே.

**25) நீரின் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட**

**26) மண்ணின் திண்மை வைத்தோன் என்று என்று**

**27) எனைப் பல கோடி எனைப் பல பிறவும்**

**28) அனைத்து அனைத்து அவ்வயின் அடைந்தோன் அஃதான்று**

அன்று கதிரேசனின் வயலில் நெல் விதைக்கப்பட்டது. அதைப் பார்க்கப் பலர் வயலில் கூடியிருந்தனர். கதிரேசன் ஒரு சிறந்த விவசாயி. அவர் நெல் விதைக்கும் முறையைப் பார்த்துத் தாமும் அவ்வாறு விதைப்பதற்காகப் பலர் கூடி நின்றனர்.

நல்லைநாதன் சொன்னார்; "ஒவ்வொரு வருடமும் அவர் விதைப்பதைப் பார்க்கிறீர்கள். ஆனால் அவ்வாறு செய்வதில்லை. உலகம் கமக்காரரை நம்பியே இருக்கிறது. ஒரு பலம் புழுதி கால்பலம் ஆகும்படி உழவேண்டும். நன்றாகக் காயவிட வேண்டும். அப்படிச் செய்தால் எரு இடத்தேவையில்லை. உழுவதோடு எருவிடல் வேண்டும். பயிர் வளரும்போது அதனுடன் வளரும் களைகளை அகற்ற வேண்டும். காவல் காக்க வேண்டும். உழவன் தினமும் வயலைச் சென்று பார்வையிடல் வேண்டும். சுருங்கச் சொன்னால் கணவன் மனைவியைக் கவனிப்பதுபோல உழவன் வயலையும் கவனித்தல் வேண்டும். இவற்றைச் சரிவரச் செய்தால் விளைச்சல் வராமலா போகும். நீங்கள் யார் ஒழுங்காக வயலை உழுகிறீர்கள். களை எடுக்கிறீர்கள். ஒவ்வொரு முறையும் வந்து பார்த்தால் போதுமா? அதன்படி செய்யவல்லவா வேண்டும். சிவன் பூமியில்

செழுமையை வைத்துள்ளான். அதைச் செழிக்கப்பண்ண அவன் நீரில் சுவையை வைத்துள்ளான். அதுபோலத் தேவையானவற்றையெல்லாம் அவ்வப் பொருட்களில் வைத்துள்ளான். உலகில் நடைபெறும் கோடிக்கணக்கான தொழில்களுள் அவற்றிற்கேற்ப எல்லாவற்றையும் வைத்துள்ளான். அவன் வைக்காதது எவையும் இல்லை. அப்படி இருக்க மனிதர்கள் அறியாமையாலும், முயற்சியின்மையாலும், சிவனை நம்பாததாலும் தான் துன்பமடைகின்றனர். கதிரேசன் முயற்சியுள்ளவர். எதை எதைச் செய்யவேண்டும் என்று தெரிந்தவர். சிவனை முழுமையாக நம்புபவர். அதனால் அவர் சரியாகத் தெரிந்த பின்பே எதனையும் செய்வார். நீங்கள் ஒழுங்காக உழுவதில்லை. பசளையிடுவதில்லை. சிவனின் நம்பிக்கை வைப்பதில்லை. பின் எப்படி விளைச்சலை எதிர்பார்ப்பீர்கள்."

"நல்லை, வருடா வருடம் இவர்கள் வருகிறார்கள். நீயும் சலிக்காது சொல்கிறாய். இவர்கள் கேட்பார்களேயன்றிச் செயற்பட மாட்டார்கள். முதலில் சிவனை நம்புங்கள். அந்த நம்பிக்கை உங்களை நல்லவழியில் செயற்படுத்தும். சிவன் தேவையான அனைத்தையும் படைத்துள்ளான். அவரவர் தமக்குத் தேவையானவற்றை எடுத்துச் செயற்பட வேண்டும். அவனின் மகிமையைச் சொல்லி முடிக்க முடியாது. கோடிக்கணக்கில் அவை விரிகின்றன. ஒவ்வொன்றையும் அவன் பொருத்தமான இடங்களில் வைத்துள்ளான். அதைப் புரிந்து கொள்ள மறுப்பவர்கள்தான் துன்பப்படுகின்றனர்" என்றார் கதிரேசன்.

### 29) முன்னோன் காண்க முழுதோண் காண்க

''எப்படிச் சொன்னாலும் புரிந்து கொள்ளாதவர்களுக்குத் திரும்பத் திரும்பச் சொல்பவன் முட்டாள். பழனிவேல், சென்ற வருடம் நீ விதைத்த பின்பு எதைச் செய்தாய். கடைசி களையாவது எடுத்தாயா? நல்லவர்களைவிடத் தீயவர்கள் செழிப்பாக இருப்பதைப்போலப் பயிரைவிடக் களைகள் சிறப்பாக வளர்ந்து பயிரை அழித்துவிடும். அதனை நீ உணரவில்லை. அதனால்தான் நட்டமடைந்தாய். எனக்கு ஒருமுறை தன்னும் நட்டமேற்படவில்லை. மழையின்மையால் நீர் பாய்ச்ச முடியாவிட்டாலும் சிவன் ஏதோ வழி செய்வான் என்று நினைப்பேன். சிவனை ஆராதிப்பேன். மழைபெய்யும். நாம் செய்ய முடியாதவற்றைத் தான் இறைவனிடம் கேட்க வேண்டும். களையை எடுக்கும்படி சிவனைக் கேட்கலாமா…? உழுது தரும்படி கேட்கலாமா….? களை எடுக்கக் கூலியாட்களையும், உழவு செய்ய எருதுகளையும், தற்போது இயந்திரங்களையும்

சிவன் படைத்துள்ளான். அதனை உணராமல் பலர் சிவனைக் குறைகூறிக் கொண்டு திரிகிறார்கள். மழையை நாம் வரவழைக்க முடியாது. அதற்குப் பிரார்த்தனை செய்யலாம். களையை எடுக்கப் பிரார்த்தனை செய்யலாமா….? அனைத்திற்கும் ஆதிமூலமாகவும், பூரணமாகவும், சுவானுபூதியாகவும் இருக்கும் சிவன் தான் செய்யவேண்டியவற்றைத் தவறாது செய்வான். அதை இறை உணர்வு உள்ளவர்களால்தான் புரிந்து கொள்ள முடியும். எல்லாவற்றிற்கும் மூலமான அவன் எல்லாவற்றையும் குறைகள் இன்றிப் படைத்தருளியுள்ளான். சிவன் பூரணமானவன். அதனால் அவனது படைப்புக்களும் பூரணமானவை. இவற்றை உணர்பவன்தான் இன்பமாக வாழ்வான்” என்றார் கதிரேசன்.

**30) தன்நேர் இல்லோன் தானே காண்க.**

“எதையும் பார்ப்பதாலோ அல்லது கேட்பதாலோ அல்லது சொல்வதாலோ அது பூரணமாகாது. இறை நம்பிக்கையுடன் விடாமுயற்சியில் ஈடுபடல் வேண்டும். அதை இறைவன் தான் தரல் வேண்டும். சிவன் பூரணமானவன். அவன் பூரணமில்லாத எதையும் படைக்க மாட்டான். படைக்கப்பட்ட பூரணமான பொருட்களின் தன்மையை உணராதவர்கள்தான் பல்வேறுவிதமான கதைகளைக் கதைக்கின்றனர். கதிரேசன் பணக்காரர். அவர் பணத்தால் எதையும் செய்வார். சிவனுக்கு வேண்டியவற்றைப் பணத்தால் செய்வார். அதனால்தான் சிவன் எப்போதும் அவருக்கு உதவுகிறார் என்று பலர் சொல்கிறார்கள். சிவனுக்கு உதவ வேண்டிய தேவை இல்லை. பணம், பொருளைப் படைத்த அவர் அதில் ஆசைப்படுவாரா…..? தானே படைத்து எடுத்துக் கொள்ளலாம் தானே. சிவனுக்குத் தேவை சுத்தமான மனம். சுத்தமான அழகியபூ. பூவைவைத்து ஐந்தெழுத்தை ஓதினால் போதும். அவன் எல்லாவற்றையும் மனமுவந்து தருவான். இதை நம்பியவர்கள் நன்மையடைந்துள்ளனர். நடராசா பெரும் சிவபக்தன். வருடா வருடம் நல்ல விளைச்சல் கிடைக்கிறது. அவனது மகனான பிரதீபனுக்கு நிர்வாக அதிகாரியாகப் பதவி கிடைத்துள்ளது. அவளது மகள் பூங்கோதை வைத்தியர். அவள் ஒரு வைத்தியனைத் திருமணம் செய்துள்ளாள். பலர் முயற்சி செய்யாமலும், கடவுளை வணங்காமலும் இருந்து கொண்டு தீய செயல்களைச் செய்கிறார்கள். அவை எப்படி நல்ல பயனைத் தரும். சிவன் பூரணமான பொருள். அதனால் அவனுக்கு எந்தவிதப் பற்றுப் பாசங்களும் இல்லை. அதுபோலச் சிவனை வணங்குபவர்களும் பற்றுக்களின்றி வணங்கினால் அவர்களின் செயல்கள் யாவும் நிறைவடையும். பூரணமான சிவனுக்கு ஒப்பானது எதுவும் இல்லை. அதனால் பணம் பொருள் செலவு செய்யத் தேவையில்லை. கை கூப்பித் தொழுதாலே போதும்” என்றார் கதிரேசன்.

**31) ஏனம் தொல் எயிறு அணிந்தோன் காண்க**

**32) கானம் புலி உரி அரையோன் காண்க**

அதிகாலையில் தேவராசா என்ற வர்த்தகர் கதிரேசனைத் தேடி வந்தார். அவர் ஒரு சிவபக்தர். அவருக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் ஒருவனைக் காதலித்தாள். அவன் தொழில் இல்லாதவன். அத்துடன் தீயசெயல்களைச் செய்பவன். தேவராசாவின் மகள் காயத்திரி பிடிவாதக்காரி. யார் எதைச் சொன்னாலும் கேட்கமாட்டாள். தான் காதலிக்கும் அவனைத் திருமணம் செய்யாவிட்டால் தான் தற்கொலை செய்வேன் என்று சொல்லி வந்தாள். அதனால் அவள் விரும்பிய அகிலனை அவளுக்குத் திருமணம் செய்து வைத்தார் தேவராசா. அதன்பின் காயத்திரி வற்புறுத்தி வியாபார நிலையத்தைத் தனக்குரியதாக்கியதால் அகிலனே பொறுப்பாளரானான். சமீப நாட்களாக தேவராசாவிடம் பல கோடி ரூபா பெறுமதியான சொத்திருக்கென்று சொல்லி காயத்திரி அவற்றைத் தனது பெயருக்கு எழுதி வைக்குமாறு வற்புறுத்தினாள். அதனால் அவரும் அவரது மனைவியும் வீட்டைவிட்டு வெளியேறிவிட்டனர். அதனால் தேவராசா அதுபற்றிக் கதைப்பதற்காகக் கதிரேசனிடம் வந்தார். சிவபூசையை முடித்துவிட்டு வந்த கதிரேசன் தேவராசாவின் அருகில் வந்திருந்தார்; "தேவராசா, உனது மகள் தனது கணவனோடு சேர்ந்து உன்னை வீட்டைவிட்டு வெளியேறுமாறு சொன்னதால் நீ உனது சிப்பந்தியின் வீட்டில் இருக்கிறாய். உழைக்கும்போது பிற்காலத்தில் இப்படி நடக்கும் என்று எதிர்பார்க்க வேண்டும். தற்போதைய பிள்ளைகள் சிலர் மிகவும் கேவலமாக நடக்கிறார்கள்" என்றார் கதிரேசன்.

"ஐயா, சிவன் எல்லாம் வல்லவன். அனைத்திற்கும் ஆதிமூலமானவன். பூரணன். தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். இதை உணராத அசுரர்கள் பல ஆண்டுகாலம் கடுமையாகத் தவஞ்செய்து அரிய பல வரங்களைப் பெற்றபின் சிவனாலும் இனி எம்மை எதுவும் செய்ய முடியாதென்று நினைத்து ஆணவத்தோடு வலிந்து சண்டையிட்டார்கள். அப்போது அவர்கள் சிவனால் தம்மை எதுவும் செய்ய முடியாதென்று நினைத்தார்கள். சிவனது சக்தி கடலைவிடப் பெரியது என்பதை அவர்கள் உணரவில்லை. சாகாவரம் கொடுக்கும் போதும் சிவன் அதற்கும் ஒரு வழி அமைத்திருப்பான் என்பதை அறியாத அசுரர் பன்றி வடிவெடுத்தும், கொடிய புலியின் வடிவெடுத்தும் சிவனைக் கொல்ல வந்தபோது சிவன் பன்றியைக் கொன்று அதன் கொம்பை

அணிந்தார். அது போலப் புலியின் தோலையுரித்து ஆடையாக அணிந்தார். இது சிவனடியார்களுக்கு ஒரு படிப்பினை. எவ்வளவுதான் அன்புள்ள மக்களாக இருந்தாலும் ஒரு தந்தை தனது முழுச்சொத்தையும் கொடுக்கக்கூடாது என்பதை நாம் புரிந்து கொள்ளவே அத்திருவிளையாடல் நிகழ்த்தப்பட்டது. என்னிடம் நிறையச் சொத்திருக்கு. பணம் இருக்கு. நான் இருப்பது எனது வீடு. அதை எனது சிப்பந்திக்கு இருக்கக் கொடுத்துள்ளேன். அவன் ஒழுங்கானவனாக இருந்தால் அவனுக்கு அவ்வீட்டைக் கொடுப்பேன். எனது மகளுக்கும் அவளது கணவனுக்கும் என்னிடம் பணம் இருப்பதாகச் சந்தேகம். அதனால்தான் தினமும் சண்டை செய்கிறார்கள். எனக்குப் பின் அது தமக்குச் சேரும் என்பதை நினையாது ஆசைப்படுகின்றனர். இப்போ நான் காவல்துறையில் புகாரிடப் போகிறேன். அது விடயமாகத்தான் உங்களோடு கதைக்க வந்தேன்" என்றார் தேவராசா.

**33) நீற்றோன் காண்க நினைதொறும் நினைதொறும்**

**34) ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்**

‘‘ஐயா, எவ்வளவுதான் எரித்தாலும் எது வேகாது இருக்கிறதோ அது நீறு எனப்படும். அதுபோலப் பிரளயத்தின்போது எல்லாம் அழிந்த பின்பும் அழியாது இருப்பவன் சிவன். அவன் எரிக்க எரிக்க அழியாதிருக்கும் நீற்றைப் பூசியவன். அத்தகைய நீற்றைப் பூசியவனை, நீறு பூசி அவனையே நினைத்திருக்கும் நான் எதற்கும் அஞ்சமாட்டேன். சிவன் என்னுடன் கூட இருந்து என்னை செயற்படுத்துகிறார். அதுதான் உண்மை. அதை மறந்தால் நான் பெரும் துன்பத்துக்குள்ளாவேன். அவனை நினைத்துக் கொண்டு எதைச் செய்தாலும் அவனும் கூட இருந்து உதவி செய்வான். அது செய்யக்கூடாததாக இருந்தால் அதனை அவன் விலக்கி வைப்பான். செய்யக்கூடியதாக இருந்தால் அதனை முடித்து வைப்பான். இது எனது வாழ்வில் தினமும் நடைபெறுகிறது. காயத்திரிக்கு ஏன் அகிலனைச் செய்து வைத்தேன் என்றால் அது அவளது வினை. வினைப்படி அவனை அவளோடு சேர்த்து வைத்திருக்கிறார். அதை மாற்ற முடியாது" என்றார் தேவராசா.

"உண்மைதான், இதைப் பெரும்பாலானவர்கள் உணர்வதில்லை. அதனால்தான் துன்பப்படுகின்றனர். காவல்துறைக்குச் செல்லுமுன் காயத்திரியுடன் ஒரு முறை பேசிப் பார்த்தால் என்ன…?" கதிரேசன் கேட்டார்.

“ஐயா, கெடுகுடி சொற்கேளாது. எனது மனைவி பொறுமைமிக்கவள். சிவனடியாள். பலமாகக் கதைக்காதவள். அவளே மனம் வாடிப் போனாள். கேட்கக்கூடாத கேள்விகளைக் கேட்டபின் பிள்ளை தாய் என்ற உறவுக்கு இடமில்லை என்று சொல்லி வீட்டைவிட்டுப் புறப்பட்டுவிட்டாள். அதன்பின் யோசிக்க என்ன இருக்கிறது..?” என்று கேட்டார் தேவராசா.

“பொறுமையாக இருப்பது தோல்வியாகாது” என்று கதிரேசன் கூறும்போது குறுக்கிட்டுச் சொன்னார் தேவராசா; “அவர்கள் யாரையும் மதிப்பதில்லை. அகிலனின் பெற்றோர், சகோதரங்கள் நியாயத்தை எடுத்துக்கூறியபோது அவர்களை மதிக்காது சண்டையிட்டார்கள். நல்லைநாதன் இதுபற்றிக் கதைக்கச் சென்றபோது அவள்; “அண்ணை, இது எமது குடும்ப விடயம். இதில் தலையிட வேண்டாம்” என்றவள். “அப்படியிருக்க நீங்கள் கதைப்பதை ஏற்பாளா…? அதனால் நீங்கள் போய்க் கதைக்க வேண்டாம்” என்றார் தேவராசா.

**35) இன் இசை வீணையில் இசைத்தோன் காண்க**

**36) அன்னது ஒன்று அவ்வயின் அறிந்தோன் காண்க**

தேவராசாவும் கதிரேசனும் ஆச்சிரமத்திற்கு வந்தபோது சுந்தரமூர்த்தி சுவாமியார் சிவபுராணத்தை இசையுடன் பாடிக் கொண்டிருந்தார். ஆச்சிரம மாணவர்கள் பக்கவாத்தியங்களை வாசித்துக் கொண்டிருந்தனர். அதைக் கேட்டதும் கதிரேசன் சுவாமியாரின் அருகே சென்றார். சுவாமியார் மிகவும் அருமையாகப் பாடுவார். அவர் ஆச்சிரமத்திற்கு வரும் மாணவர்களுக்கு வாய்ப்பாட்டு, மிருதங்கம், புல்லாங்குழல், வீணை முதலிய இசைக் கருவிகளை வாசிக்கும் முறைகளைச் சொல்லிக் கொடுப்பார். அதனால் மாணவர்களில் பலர் இசையில் தேர்ச்சி பெற்றிருந்தனர். சுவாமிகள் சொல்வார்; “கலைகளில் மிகச் சிறந்தது இசையாகும். சிவன் நாதவடிவினன். அவன் ஓசைமயமாகத் திகழ்கிறன். இசையென்னும் கலைஞானத்தை நல்ல முறையில் பயின்றால் அது பரஞானத்தை அடையவைத்துச் சிவனது திருவடியை அடையச் செய்யும். இசைதான் சிவன். சிவன்தான் இசை. சிவன் இசைப்பிரியன். அவன்மீது அன்புகொண்டு இசையுடன் பாடினால் அவன் தன்னை மறந்து விடுவான். அதனால்தான் இராவணன் உயிர் பிழைத்தவன். இராவணன் தனது தாயார்

வணங்குவதற்காகக் கைலாய மலையைப் பெயர்த்துத் தூக்கியபோது சிவன் கடுங்கோபங் கொண்டு அவனைத் தனது பெருவிரலால் நசுக்க அவன் இசையோடு இனிய பாடலைப் பாடிமையால் அதை ரசித்து மெய்மறந்த சிவன் தன்னையறியாமலே தனது காலை எடுத்தார். சிவன் இசைப்பிரியன். அதனால் இசையுடன் பாடி இறைவனை வலுப்படுத்துவோம்” என்பார்.

கதிரேசனும் இசைப்பிரியர். அதனால் ஆச்சிரமத்தில் இசைக்கச்சேரி நடைபெற்றால் எந்த வேலை இருந்தாலும் அதை விட்டுவிட்டு வந்து விடுவார். “தேவராசா இசை உலகநினைவுகள் யாவற்றையும் மறக்க வைக்கும். இப்போது உனக்கு மன அமைதி தேவை. இந்த அருமையான இசையைக் கேட்டு மகிழ்” என்றார் கதிரேசன்.

**37) பரமன் காண்க பழையோன் காண்க**

**38) பிரமன் மால் காணாப் பெரியோன் காண்க**

பஜனை முடிந்ததும் சுவாமியார் எழுந்து சென்றார். மாணவர்களும், பஜனைக்குழுவும் சுவாமியாரின் பின் சென்றனர்.

“இசையோடு சிவபுராணத்தைக் கேட்டதால் எனது மனம் அமைதி அடைந்து விட்டது. இனி நான் ஆச்சிரமத்திலேயே எனது பெரும்பாலான பொழுதைக் கழிக்க விரும்புகின்றேன்” என்றார் தேவராசா.

“எல்லாம் வினைப்பயன். காசிருந்தென்ன, பொருளிருந்தென்ன முன்வினையை அனுபவித்துத்தான் கழிக்க வேண்டும். சிவன் பிரபஞ்சத்திற்கு அப்பால் இருப்பவன். அவன் புராணன் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். அவன் எல்லலையில்லாதவனாகையால் அவனை நான்முகனாலும், பிரமனாலும் கூட அறிந்து கொள்ள முடியாது. ஆனால் பற்றற்று ஒரு கணம் அவனைச் சிந்தித்தால் அவன் சிந்திப்பவர்களின் உள்ளத்தில் புகுந்து கொள்வான். இதைப் புரிந்து கொள்ளாதவர்கள்தான் துன்பங்களைத் தாமே தேடித் துன்பப்படுகின்றனர். உங்களது மகளுக்கும் மருமகனுக்கும் இது புரியாததால் தான் துன்பப்படுகின்றனர். உங்களின் வசமிருந்த வர்த்தகத்தைத் தம்வசப்படுத்தினர். அதனால் பெரு நட்டம் அடைந்துள்ளனர். அந்த நட்டத்தை

ஈடுசெய்யவே உங்களிடம் இருக்கும் பொருளை எதிர்பார்க்கின்றனர். நம்பிக்கை தான் கடவுளின் இருப்பை உணரச் செய்கிறது. அதுபோல எல்லாச் செயல்களும் வெற்றியளிக்கவும் நம்பிக்கையே உதவுகிறது. எம்மால் எதுவும் செய்ய முடியாது. பிரபஞ்சத்திற்கு அப்பால் இருக்கும் சிவன்தான் அண்டங்கள் அனைத்தையும் இயக்குகின்றான். அவன் பிரமனாலாலும் திருமாலாலும் கூட அறிய முடியாதவன் என்பதை உணர்பவர்தான் இன்பமாக வாழ்வார். மற்றவர்கள் துன்பத்தைத்தவிர வேறு எதையும் அனுபவிக்கமாட்டார்கள். அப்படி அனுபவித்தபோதும் திருந்த மாட்டார்கள். காயத்திரியும் அகிலனும் அத்தகையவர்கள். அவர்கள் தமது சக்தியால் எதையும் செய்யலாமென்று நினைக்கின்றனர். அத்துடன் தம்மைப்போன்ற சிவ உணர்வு இல்லாதவர்களின் பேச்சையே நம்புகின்றனர். இப்படி நம்புபவர்கள்தான் அடிக்கடி துன்பப்படுகின்றனர். அத்துன்பங்கள் தமது விதி என்று நம்புகின்றனர். விதியை மாற்றச் சிவனால் முடியும் என்பதையும் நம்பமறுக்கின்றனர். இப்படியானவர்களை யாராலும் திருத்த முடியாது. அவர்களிடம் உள்ள ஆணவம் அவர்களைத் திருந்த விடாது” என்றார் கதிரேசன்.

**39) அற்புதன் காண்க அநேகன் காண்க**

**40) சொல்பதம் கடந்த தொல்லோன் காண்க**

அன்று காலை அகிலனும் காயத்திரியும் கதிரேசனது வீட்டுக்கு வந்தனர். காயத்திரி தனது தகப்பனும் தாயும் தன்னைவிட்டுவிட்டுச் சென்றதால் பெருந்துன்பப்படுவதுபோல நடித்தாள்.

“ஐயா, அப்பா என்னை மிகவும் செல்லமாக வளர்த்தவர். அதனால் அவரின்மீது நான் அளவில்லாத பாசத்தை வைத்துள்ளேன். அதை உணராது அவர் என்னைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டார். அத்துடன் அம்மா இல்லாமையால் நான் பெரும் துன்பப்படுகின்றேன். பலமுறை நான் சென்று கேட்டும் அவர் வர மறுக்கிறார். அம்மாவுக்கு விருப்பம். ஆனால் அப்பாவைப் பிரிந்துவர மறுக்கிறார்” என்று அழுதாள்.

“உனது வீட்டில் நடந்ததெல்லாம் எனக்குத் தெரியும். அம்மா இல்லாததால் உனக்கு வீட்டு வேலைகள் செய்ய முடியாமல் இருக்கு. தாய் தந்தையர் சக்தியும் சிவனையும் போன்றவர்கள். அவர்களை அன்போடு மதித்தல்

வேண்டும். அப்படி நீ மதிக்காமையால்தான் அவர் உனது வீட்டைவிட்டுப் புறப்பட்டவர். தேவராசா மிகவும் நல்ல மனிதர். சிவனின் அடியவர். மற்றைய உயிர்களைத் தன்னுயிர்போல மதிப்பவர். சிவபெருமான் வியப்புக்குரியவன் என்றும், எண்ணிறைந்த வடிவங்களை எடுத்துப் பக்தர்களைக் காப்பவன் என்றும் சொல்லில் அடக்க முடியாத பரம்பொருள் என்றும் உணர்ந்து அவனது திருவடியைத் தொழுபவர். அப்படியானவர் பிழை செய்யமாட்டார். ஆனால் உனது கணவன் அப்படியானவன் அல்ல. குடிப்பவன், மாமிசம் உண்பவன், தீய செயல்களைச் செய்பவன். அவனது செயல்களை நீ கண்டிக்காது உனது தந்தையைக் கண்டிக்கிறாய். சென்றவாரம் பிரதோசதினத்திலன்று சிவனின் வாகனமான காளை மாட்டைக் கொன்று அதன் மாமிசத்தைச் சமைத்து உண்டுள்ளாய். இது சிவத்துரோகம். பிள்ளையானாலும் சிவத்துரோகம் செய்பவர்களை மன்னிக்கக்கூடாது என்று உனது தந்தை நினைத்தமையால்தான் உனது வீட்டைவிட்டு வெளியேறினார். அவர் இனித் திரும்பி வரமாட்டார். சிவனடியான் சிவனைப் பெரும் பொருளாகவும், அவன் பல வடிவங்களை எடுத்துத் தனக்கு உதவுபவனாக இருப்பவன் எனவும் உணர்ந்தவன் ஒரு கணமும் சிவனை நினையாதவர்களைத் தனது உறவென்று கருதமாட்டான். முதலில் நீ அதை உணர். அதன்பின் வா உனது தந்தையோடு நான் கதைத்துச் சமாதானப்படுத்தி உன்னுடன் அனுப்பி வைக்கிறேன்" என்றார் கதிரேசன்.

**41) சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க**

**42) பக்திவலையில் படுவோன் காண்க**

"காயத்திரி, சிவன் மனதிற்கு எட்டாத் தூரத்தில் இருப்பவன் போலக் காணப்பட்டாலும், அவனின் மீது அன்பு செலுத்துவதன்மூலம் அவனை நாம் முற்றிலும் நமக்குச் சொந்தமானவனாக ஆக்கிக் கொள்ளலாம் என்பதைப் பலர் உணர்வதில்லை. ஒவ்வொருவரது உயிரிலும் கலந்துள்ள அவனைப் பலர் தேடி அலைகின்றனர். தமது கண்ணுக்கு அவன் எட்டாததால் அவன் இல்லாத பொருள் என்றே நினைக்கின்றனர். அப்படி நினைப்பவர்களுள் நீயும் உனது கணவனும் அடங்குவர். ஒருவர் மற்றவர்களின் எண்ணத்தை மதிக்க வேண்டும். ஐம்பது வருடங்களாகச் சிவனை வழிபடும் உனது பெற்றோரின் எண்ணங்களைப் புரியாத உன்னை எப்படி அவர் தனது மகளாக ஏற்பார். உனது கணவனின் தந்தை சிவராசா, சிவனை நிந்தனை செய்பவன். சிவனது திருநாட்களில்

மாமிசமும் மதுவும் உண்பவன். உண்டுவிட்டுக் கோவிலடியில் கலகம் செய்பவன். அதனால் அகிலன் தந்தையைப் பார்த்து அவ்வாறு நடக்கின்றானென்றால், சிவபக்தனான தேவராசா செய்யும் செயல்களைப் பார்த்து நீ வாழ்ந்திருக்க வேண்டும். உனது திறமையால் அகிலனைச் சிவபக்தனாக்கி இருத்தல் வேண்டும். அதைவிட்டுவிட்டு காணக்கிடைக்காத கடவுளைக் காட்டித் துன்பப்படுவது நியாயமா என்று உனது தந்தையைக் கேட்டுள்ளாய். ஒரு கணம் அன்போடு சிவனை நினைத்து வணங்கிப்பார். அவன் கண்ணுக்குத் தெரியக்கூடிய, மனதுக்குள் அகப்படக்கூடிய பொருளாகி விடுவான். அதைச் செய்யாது திமிருடன் பேசுவதால் பயனில்லை. தேவராசா தந்த சொத்தில் அரைவாசிக்குமேல் அவமாகச் சென்றுவிட்டது. மிகுதியும் செலவானபின்புதான் உனக்குத் தந்தையினதும், சிவனினதும் பெருமை தெரியும்" என்றார் கதிரேசன்.

**43) ஒருவன் என்னும் ஒருவன் காண்க**

**44) விரிபொழில் முழுதாய் விரித்தோன் காண்க**

"நீ படித்தவள். சைவப் பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் பிறந்தவள். அகிலன் அப்படியானவன் அல்ல. அவனது தந்தை பெயருக்குச் சைவனாக இருந்த போதும் மது, மாமிசம் உண்ணும் குடும்பத்தைச் சேர்ந்தவன். அதனால்தான் அவனைத் தனது மருமகனாக ஏற்கத் தேவராசா மறுத்தவர். அதனால் அகிலனின் தந்தை சிவராசாவுக்கு அவரின்மீது கோபம் அதிகம். நானும் வேளாளன்தான். அவரும் வேளாளன்தான். நாங்கள் என்ன இழிந்த குடும்பமா என்று சிவராசா கேட்டபோது, "சிவனை வணங்காத எந்தக் குடும்பமும் இழிந்த குடும்பம்தான்" என்றவர். அதனால் பெரும் பிரச்சினை ஏற்பட்டது. உனக்குத் தெரியும். சிவனைத்தவிர இரண்டாவது தெய்வம் வேறு எதுவும் இல்லை. அவனே உலகமாகவும், உலகிலுள்ள எல்லாப் பொருட்களாகவும் விரிந்திருக்கின்றான். இதை எல்லோரும் அறிதல் வேண்டும். அறியாதவர்கள் அறிந்து கொள்ளவேண்டுமே தவிர அறிந்தவனை நிந்திக்கக் கூடாது. சிவராசாவின் தம்பியான நவராசா சகோதரனைப்போலக் குடித்து வெறித்துக் கொண்டு திரிந்தவன். அவனது மகனுக்குத் திடீரென்று பெரும்நோய் வந்ததால் அவனை அழைத்துக் கொண்டு ஆச்சிரமத்திற்கு வந்து சிவனை வழிபட்டவன். அதனால் அவனது நோய் குணமானதோடு பொறியியலாளனாகவும் படித்துச் சித்தியடைந்து பெரியதொரு பணக்காரப் பெண்ணைத் திருமணம் செய்தவன். அதனால் நவராசா இப்போ முழுமையான சிவபக்தன். அவன் சிவன்தான் தனது

குடும்பத்தை மேல்நிலைக்குக் கொண்டு வந்தவன் என்றும், அவனைத் தவிர வேறு தெய்வம் இல்லை என்றும், அவன் தான் எனது உலகம் என்றும் கூறி உனது மாமனாருடனான தொடர்பைத் துண்டித்து விட்டான். அதன் பின்பும் உனது கணவனும் நீயும் சிவராசாவினது பேச்சைத்தானே கேட்கிறீகள். படித்த உனக்கு இது தவறாகத் தெரியவில்லையா…?” என்று கேட்டார் கதிரேசன்.

**45) அனுத் தரும் தன்மையில் ஐயோன் காண்க**
**46) இணைப்பு அரும் பெருமையில் ஈசன் காண்க**

காயத்திரி சொன்னாள்; “ஐயா, ஏன் நான் எனது அப்பாவை வெறுக்கிறேன் என்று தெரியவில்லை. ஆரம்பத்தில் எனக்கு அகிலனின் மீது விருப்பமுண்டாகவில்லை. பின் அவர் நான் செல்லுமிடமெல்லாம் என்னைப் பின்தொடர்ந்து வருவார். எனது நண்பிகளிடம் சொல்லியனுப்புவார். ஒருமுறை இந்தியத் திருத்தலங்களுக்குச் சென்று வந்தபோது திருநீறு, உடைகள், தின்பண்டங்களைக் கொண்டு வந்து எனது சிநேகிதி ஒருத்தியிடம் கொடுத்து அனுப்பியுள்ளார். நான் அவள் தந்த உடைகளை அணியவில்லை. உணவையும் உண்ணவில்லை. நீற்றைப் பூசினேன். அதன்பின் தான் அவரின் மீது அன்பு உண்டானது. இப்போதும் அப்படித்தான். அவர் இல்லாத வேளைகளில் அப்பாவின் நினைவும், சிவனின் நினைவும் வருகிறது. அவரைக் கண்டதும் அது அற்றுப்போய் விடுகிறது. அவர் ஏதாவது வசியம் செய்திருப்பாரா…?”

கதிரேசன் அதைக்கேட்டுச் சிரித்தார். பின், மகளே; “வசியம், மருத்தீடு, செய்வினை, சூனியம் என்பதெல்லாம் பொய். வினைப்படி வாழ்க்கை அமைகிறது. அதை அமைப்பவர் சிவன். செய்வினை, சூனியம், மருத்தீடு, வசியம் என்பவற்றால் ஒருவனின் வாழ்வைக் கெடுக்கலாமென்றால் சிவனின் தொழில் என்ன? அதைச் செய்பவர் சிவனாகிவிடுவார் அல்லவா? ஒருவர் எவ்வேளையிலும் ஒன்றையே நினைத்துக் கொண்டிருந்தால் அதுவாகி அதற்கு அடிமையாகி விடுவர். காதல் என்பது கவர்ச்சியால் உருவாவதில்லை. முன்செய்த வினையால் உண்டாகிறது. அது ஏற்றநேரம் வந்ததும் கைகூடும். சிவனை நினைத்த நீ அகிலனை நினைத்தாய். அவன் உன்னை மாற்றுவதற்காக உன்மீது அளவில்லாத அன்பைச் சொரிவதுபோல நடந்தான். அதை நீ நம்பியதால் தான் உனக்கு இந்த நிலை உண்டானது. சிவன் அணுவைவிட நுண்ணியவன். அதனால் அணுவைவிடச் சிறிய விடயங்களையும் அறிந்து கொள்வான். அதைப்போலப் பெரியவற்றுள் எல்லாம் பெரியவன். அதனால் அனைத்தையும்

அறிந்தவனாவான். அப்படியானவன் உயிர்களின் உள்ளத்தில் வீற்றிருக்கிறான். பற்றற்று அவனை வணங்குபவர்கள் எல்லாத் தீமைகளில் இருந்தும் விடுபடுவார்கள். நுண்மையானவனாகவும் மிகவும் பருமனானவனாகவும் இருக்கும் அவனைக் காண முடியாது. காணவேண்டுமானால் அவன் உனது மனதில் இருப்பதைக் கண்டுகொள்ள வேண்டும். முதலில் நீ அதைச் செய். எல்லாம் நல்லபடி நடக்கும்" என்றார்.

**47) அரியதில் அரிய அரியோன் காண்க**

**48) மருவி எப்பொருளும் வளர்ப்போன் காண்க**

"மகளே, சிவன் அரிதிலும் அரியவன். அவனது பெருமைகளை வாயால் சொல்லி முடிக்க முடியாது. அதுபோல மனதாலும் எண்ணி முடிக்க முடியாது. அப்படியானவன் உலகிலுள்ள அனைத்துப் பொருட்களிலும், உயிர்களிலும் ஊடுருவியிருந்து அவற்றிற்குத் தேவையானவற்றைக் கொடுத்தருள்கிறான். இதை உணராதவர்கள் தான் துன்பப்படுகின்றனர். ஒருவர் மனதால் ஒரு தீயசெயலை நினைத்தாலும், அது சிவனுக்குத் தெரியும். யாரும் காணவில்லை என்று ஒரு செயலைச் செய்ய முடியாது. சிவன் நுண்ணியவனாகவும், பருமனுடையவனாகவும் இருப்பதால் அவன் யாவற்றையும் அறிந்து கொள்வான். அதைச் சிவபக்தர்கள் உணர்ந்து கொள்வார்கள். யாருக்கும் தெரியாது என்று உனது கணவன் நினைத்துச் செய்யும் பல தீயசெயல்களை உனது தந்தை சிவனின் அருளால் உணர்ந்துள்ளார். அதனால்தான் அவர் உன்னைவிட்டுப் பிரிந்தவர். உனக்கு அவனது தீயசெயல்களைப் பற்றிக்கூறியபோதும் நீ அதைக் கேட்கவில்லை. அவர் உனக்குச் சொன்னதெல்லாம் உண்மை.வீட்டுக்குச் சென்று நினைத்துப்பார். உன்னை நினைக்க விடாதபடி உனது கணவன் செயலாற்றி வெற்றியையும் கண்டுவிட்டான். அன்பு என்பது எதையும் செய்ய வைக்கும். எதையும் சிந்திக்க விடாது. ஒரு நாயின் மீது அன்பு வைத்தால் அது எதையும் செய்யும். அது போலியான அன்பா, உண்மையான அன்பா என அது சிந்திக்காது. அதற்குச் சிந்திக்கவும் தெரியாது. அந்த நிலையில்தான் நீயும் உள்ளாய். அதை மாற்றுவதற்குச் சிவனைத் தொழு. மிகவும் நுண்மையாக உனக்கும் தெரியாது உன் உள்ளத்தில் இருக்கும் சிவனைக் கண்டுபிடி. உனது துயரங்கள் யாவும் தீரும்" என்றார் கதிரேசன்.

**49) நூல் உணர்வு உணரா நுண்ணியோன் காண்க**

**50) மேலொடு கீழாய் விரித்தோன் காண்க**

‘‘ஐயா, எனக்கு சோதிடத்தில் நம்பிக்கை உண்டு. எனக்குச் அட்டமத்துச்சனி நடைபெறுகிறது. அவருக்கு மூன்றில் சனி நடைபெறுகிறது. இரண்டு இடங்களும் கூடாத இடங்கள் என்று சோதிடர்கள் கூறுகின்றனர். பரிகாரங்கள் பலவும் செய்தபோதும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. சோதிடர் காலம் சரியில்லை என்கிறார். அதனால்தான் மாமாவும் எம்மைப் பிரிந்து சென்றுவிட்டார் என்று கூறுகிறார்’’ என்றாள் காயத்திரி.

‘‘மகளே, மெய்ப்பொருளை விளக்கும் நூல்களைப் படிப்பதால் சிவஞானம் ஏற்படாது. அந்தநூல்கள் கூறியபடி வாழ்ந்தால்தான் பயனடையலாம். மாம்பழம் இனிக்கும் என்று எழுதப்பட்ட தாளை உண்டால் இனிக்குமா என்ன? மாம்பழத்தை உண்ண வேண்டும். அதுபோலத்தான் நூலறிவும். படித்தவர்கள் பலர். அவர்களிற் பலர் தாம் படித்தபடியா வாழ்கிறார்கள். அவர்கள் தான் கூடுதலான தீய செயல்களைச் செய்கிறார்கள். நூலுக்குள்ச் சிவனை அடக்க முடியாது. நூல்களைப் படித்து ஒழுக்கமாக வாழ்ந்தால் சிவனை மனதுள் அடக்கலாம். மனதுள் வந்த சிவன் மகிழ்வுடன் இருந்து அருள்வான். சோதிடம் உண்மையானது அல்ல. உனது கணவனுக்குச் சோதிடம் சொல்பவன் பெரிதாகப் படிக்கவில்லை. எழுந்தமானத்தில் நூல்களில் உள்ளவற்றை வாசித்துவிட்டுச் சோதிடம் சொல்கிறான். ஒரு நட்சத்திரத்தில் பல இலட்சம் பேர் பிறந்திருப்பார்கள். நான் திருகோண நட்சத்திரத்தில் பிறந்தவன். உனது கணவனின் தந்தை சிவராசாவும் திருகோண நட்சத்திரத்தில் பிறந்தவன். இருவருக்குமிடையே எவ்வளவு வித்தியாசம் இருக்கு. அவன் புலால் உண்பான். மது அருந்துவான். சிவசிந்தனை இல்லாதவன். தீய செயல்களைச் செய்பவன். அதனால் சோதிடத்தை நம்பக்கூடாது. கிரகங்கள் சிவனின் ஆணைப்படிதான் இயங்குகின்றன. அவற்றால் எதுவும் செய்ய முடியாது. சிவனை வணங்குபவன் எதற்கும் அஞ்சத் தேவையில்லை. சிவன் ஏட்டுக் கல்விக்குள் அடக்க முடியாதவன். அத்துடன் அவன் நீக்கமற எங்கும் நிறைந்துள்ளவன். எல்லாம் அறிந்தவன். பற்றுக்களில்லாதவன். தன்னை வணங்காதவர்களுக்கும் அருள் செய்பவன். சிவனை வணங்காதவர்கள் அதை உணராது ஆணவத்தால் கெட்டுப் போகிறார்கள். உனது தந்தை உன்னையும், உனது கணவனையும் பலமுறை எச்சரித்தும், எடுத்துச் சொல்லியும் அதைப் புரிந்து கொள்ளாது வாழ்ந்ததால்தான் இந்த நிலை உங்களுக்கு ஏற்பட்டது. சிவன் நன்மை செய்தாலும் அதை ஏற்றுக்கொள்ளப் பலர் தயாராக இல்லை’’ என்றார் கதிரேசன்.

**51) அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க**

**52) பந்தமும் வீடும் படைப்போன் காண்க**

காயத்திரி கதிரேசனது வீட்டுக்கு வந்ததை அறிந்த அவளது கணவனான அகிலன் கதிரேசனது வீட்டுக்கு வந்தான். கதிரேசன் கல்லையும் கரைய வைக்கக்கூடியவர் என்பது அவனுக்குத் தெரியும். அவள் மனம் மாறினால் தனது வேடம் கலைந்துவிடுமென்று நினைத்த அகிலன் கதிரேசனது வீட்டுக்கு வந்தபோது அங்கு பலர் குழுமியிருந்தனர். காயத்திரி அவன் வந்ததைக் கவனியாமல் கதிரேசனோடு கதைத்தவாறு இருந்தாள். அதனால் கதிரேசனுக்கு அருகில் அகிலன் வந்தான்.

“அகிலா, உனது மனைவி சிவபக்தையாக இருந்தவள். அவள் சிவனை மறந்ததால்தான் இவ்வளவு துன்பங்களும் வந்தன. அவளின் அருகே இரு. இன்று பிரதோச நாள். பலரை அழைத்துள்ளேன். நீயும் வா, உணவருந்திவிட்டுச் செல்” என்று அவர் கூறும்போது அகிலன் எதையோ சொல்ல வாயுண்ணினான். அதற்கு இடம் கொடாது கதிரேசன் சொன்னார்; “சிவனுக்குத் தொடக்கமும் முடிவும் இல்லை. அதுபோல அவனது அருளுக்கும் எல்லை இல்லை. பக்தர்கள் அவனை வணங்க வணங்க அருளைச் சொரிந்து கொண்டேயிருப்பான். இன்று பிரதோச நாள். இன்று சிவன் மிகுந்த மகிழ்வுடன் அருளை அளிக்கும் நாள். அவன் உயிர்களுக்குக் கர்ம பந்தத்தையும், மோட்சத்தையும் அளிப்பவன். யார் யாரோ எங்கெங்கோ பிறக்கின்றனர். அவர்களை இணைத்து வைப்பது சிவன். அதனால்தான் நீ காயத்திரியை மனைவியாகவும், தேவராசாவை மாமனாராகவும் பெற்றாய். அவர்கள் பாக்கியவான்கள். சிவனின் அருளால் அவர்களுடன் கர்மபந்தம் ஏற்பட்டுள்ளது. அதை நல்ல முறையில் பயன்படுத்தவும் சிவனருள் வேண்டும். அவனருளால் தான் நல்ல உறவுகள் எமக்குக் கிடைக்கின்றன. மோட்சமும் கிடைக்கிறது. காயத்திரி சிவபக்தை. வினைவசத்தால் அவள் சிவனை மறந்ததால் தான் இத்துன்பங்கள் வந்து சேர்ந்தன. அதை அவள் உணரத் தொடங்கிவிட்டாள். நீயும் உணர்ந்து சிவனை வழிபடு. அவர் உண்டாக்கிய உறவைச் சீரழிக்க முயலாதே. இங்கிருந்து பிரார்த்தனை செய். பின் அடியவர்களுக்கு அமுது படைக்க எண்ணியுள்ளேன். அதை ஏற்று உண்டு விட்டுச்செல்” என்று கதிரேசன் கூறியபோது அதை அவனால் மறுக்க முடியவில்லை. காயத்திரியின் அருகில் அமர்ந்தான். காயத்திரி கண்களை மூடியவாறு இருந்தாள். கதிரேசன் சிவபுராணத்தைச் சொல்ல அவளும் அங்கிருந்தவர்களும் சொன்னார்கள். அகிலனுக்குப் பயமாக இருந்தது. அவள்

முன்புபோல சிவபக்தையாக மாறினால் தனக்கு துன்பங்கள் வருமென்று எண்ணினான்.

**53) நிற்பதும் செல்வதும் ஆனோன் காண்க**

**54) கற்பமும் இறுதியும் கண்டோன் காண்க**

சிவபுராணம் ஓதி முடிந்ததும் கதிரேசன் சொன்னார்; "நாம் நினைப்பது எதுவும் நடப்பதில்லை. அதுபோல நடப்பவறை எல்லாவற்றையும் நாம் நினைப்பதும் இல்லை. எல்லாவற்றையும் சிவனே தீர்மானிக்கின்றான். இன்று காயத்திரியும் அகிலனும் எனது வீட்டிற்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் வருவார்களென நான் நினைக்கவில்லை. அதுபோல அவர்களும் இங்கு வர நினைக்கவில்லை. காயத்திரி தனது தந்தை இருக்கும் சிப்பந்தியின் வீட்டுக்குச் சென்றாள். அவர் அங்கு இல்லை. அதனால் ஆச்சிரமத்திற்குச் சென்றாள். அங்கும் அவர் இல்லை. அதனால் அவள் இங்கு வந்தாள். அதுபோல அகிலன் தனது மனைவியைத்தேடி இங்கு வந்தான். இது யாரும் நினைக்காத ஒன்று. சிவன் இப்படி நடக்கவேண்டுமென்று தீர்மானித்ததால் தான் இது நடைபெற்றது. காலத்தைச் செயற்படுத்துபவன் அவன். அவன் காலாதீதத்தில் இருப்பதால் தான் நினைக்காதவை நடைபெறுகின்றன. நினைத்தவை நடக்காமல் போகின்றன. காயத்திரிக்கு மறைந்திருந்த சிவஉணர்வு மனதில் துளிர்க்கத் தொடங்கியுள்ளது. அதுவும் சிவன் செயல்தான். சிலர் மழைக்குக்கூடப் பாடசாலையில் ஒதுங்குவதில்லை. அதுபோலச் சிலர் என்னைச் சந்திக்க விரும்புவதில்லை. என்னைச் சந்திக்க விரும்பாத அகிலனைச் சிவன் சந்திக்க வைத்துள்ளான்" என்ற கதிரேசன், அங்கிருந்தவர்களை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றார். அங்கே சிவலிங்கம் இருந்தது. சாப்பிடுவதற்காக எல்லோரும் அமர்ந்தனர். கதிரேசன் பூக்களைச் சிவலிங்கத்திற்குச் சாத்திவிட்டு, "அரோகரா, உணவை உண்ணுங்கள் என்றார். உண்ண வந்தவர்கள் 'நமசிவய' என்று பலமுறை கூறிவிட்டு உண்ணத் தொடங்கினர்.

**55) யாவரும் பெற உறும் ஈசன் காண்க**

**56) தேவரும் அறியாச் சிவனே காண்க.**

எல்லோரும் உணவு உண்டு முடித்தபின்பு கதிரேசன் சொன்னார்; “இன்று பிரதோச நாள். நீங்கள் அனைவரும் எனது வீட்டுக்கு வந்து உணவு உண்டமையால் நான் பெரும் பேறடைந்தேன். சிவனை வணங்கி அவர் மீது அன்புகொண்டு அவரது அடியவர்களுக்கு உணவு கொடுக்கக் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும். அவனை முழுமனதோடு வணங்குபவர்கள் அனைவரும் அவனை அடைவர். அவனை வணங்காதவர்கள் தேவர்களாக இருந்தாலும் அவர்களால் சிவனை அடைய முடியாது. சிவனை வணங்குங்கள், உங்களுக்கு எல்லாப் பேறுகளும் கிடைக்கும். குழந்தை இல்லாதவர்களுக்கும் குழந்தை கிடைக்கும். பணம் இல்லாதவர்களுக்குப் பணம் கிடைக்கும். நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ அவை எல்லாம் கிடைக்கும். காயத்திரிக்குக் குழந்தை இல்லை. திருமணமாகி நான்கு வருடங்கள் கழிந்துவிட்டன. இன்று பிரதேச விரதம். எனது வீட்டில் சிவனை வணங்கித் தூயமனதுடன் சிவனுக்குப் படைக்கப்பட்ட உணவை உண்டாள். அடுத்த பிரதோசத்துக்கு முன்பு அவள் தாயாவாள்” என்று கூறினார். அதை அகிலனாலும் காயத்திரியாலும் நம்ப முடியவில்லை. அவர்களது குடும்பச் சோதிடர் பலவிதமான பூசைகளும், பரிகாரங்களும் செய்துவிட்டுக் குழந்தை பிறக்க இன்னும் ஐந்து வருடங்கள் செல்லும். காயத்திரிக்கு நாகதோசம் உள்ளது என்றவர். அதன் பிறகுதான் காயத்திரிக்குச் சிவனின் மீது வெறுப்பேற்பட்டது. ஊரவர்கள், “கதிரேசன் நடமாடும் கண்கண்ட சிவன். அவர் சொன்னால் சொன்னது நடக்கும்” என்பார்கள். அதனால் வேண்டா வெறுப்பாக இருந்த அகிலன் அவரின் அருகில் வந்து அவரின் பாதங்களைப் பணிந்தபின்பு, “ஐயா, உங்களின் மகிமை தெரியாமல் வேடதாரிகளின் பேச்சை நம்பி நான் மோசம் போய்விட்டேன். எனக்கு நீங்கள் குறிப்பிட்ட நாளில் பிள்ளை பிறந்தால் நான் முழுமையான சிவபக்தனாவேன்” என்று உணர்ச்சிவசப்பட்டான்.

கதிரேசனுக்குத்தான் மற்றவர்களுக்கு ஏதாவது சொன்னால் அது அவருக்குத் தெரியாது. அதனால் அவர் பேசவில்லை. நல்லைநாதன் சொன்னார்; “அகிலா, தேவராசாவுக்குத் தனது மகளுக்குப் பிள்ளை பிறக்காதது பெருங்கவலை. கதிரேசன் அண்ணைக்குச் சொல்லிக் குறைப்படுவார். இன்று அவர் சொல்லிவிட்டார். சிவனை வணங்குங்கோ” என்றார். காயத்திரி திகைத்துப்போய் அசையாமல் இருந்தாள்.

**57) பெண் ஆண் அலி என்னும் பெற்றியன் காண்க**

**58) கண்ணால் யானும் கண்டேன் காண்க**

கதிரேசன் அவ்வாறு சொல்லிப் பதினைந்தாவது நாள் அகிலனும் காயத்திரியும் நீறணிந்து சிவனடியார்கள் போல ஆச்சிரமத்திற்கு வந்தனர். அவர்கள் கதிரேசனைத்தேடி அவரது வீட்டுக்குச் சென்றபோது அவரது மனைவி அவர் ஆச்சிரமத்திற்குச் சென்றுவிட்டார் என்று கூற அவர்கள் ஆச்சிரமத்திற்கு வந்தனர். “ஐயா, காலையில் காயத்திரி மயக்கம் அடைந்துவிட்டாள். பயத்துடன் நான் அவளை வைத்தியரிடம் அழைத்துச் சென்றேன். வைத்தியர் அவளைப் பரீட்சித்துவிட்டு அவள் கர்ப்பமாக இருப்பதாகச் சொன்னார். நாங்கள் வீட்டுக்குச் சென்று குளித்துவிட்டு உங்களது வீட்டுக்குச் சென்றோம். உங்கள் மனைவி நீங்கள் ஆச்சிரமத்திற்குச் சென்றுவிட்டதாகக் கூறினார். அதனால் இங்கு வந்தோம். எம்மை ஆசீர்வதியுங்கள்” என்றான் அகிலன்.

“மகனே, சிவன் ஆணாகவும், பெண்ணாகவும், அலியாகவும் இருப்பவன். இதை அவனை உணர்ந்தவர்களால்தான் உணர்ந்துகொள்ள முடியும். அதனால்தான் அவன் எல்லா உயிர்களையும் புரிந்து அவற்றிற்குசு அருள் செய்கிறான். நீங்கள் சிவனைப் பூசிக்காவிட்டாலும், உங்களுக்காகத் தேவராசா அல்லும் பகலும் வணங்குகிறார். அவர் உங்களைச் சிவபக்தர்கள் ஆக்கு என்றும், உங்களுக்கு ஒரு பிள்ளை கொடு என்றும் எவ்வேளையிலும் சிவனைக் கேட்கிறார். சிவன் விருப்பு வெறுப்பு அற்றவன். தன்னை நம்பாதவர்களுக்கு அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றித் தம் பக்கம் திருப்புபவன். தேவராசாவின் பக்தியை அவனால் தட்டிக்கழிக்க முடியாது. அதனால்தான் உங்களுக்குப் பிள்ளை வரம் அளித்துள்ளான். இன்னொருவரின் பக்திக்காக உங்களுக்கு அருளியுள்ளான். நீங்கள் பக்தி செலுத்தினால் உங்களுக்கு எவ்வாறு உதவுவான் என்று புரிந்து கொள்ளுங்கள்” என்றார் கதிரேசன்.

“ஐயா, எனது நண்பர்கள் பலர் சிவபக்தர்கள். அவர்கள் செய்யும் செயல்கள் எவையும் தோற்றுப்போவதில்லை. ஆனால் நான் செய்யும் அத்தனை செயல்களும் துன்பத்தைத்தான் தருகின்றன. அவற்றைக் கண்டும், அனுபவித்தும் என்னால் திருந்த முடியவில்லை. பூசைகள், கழிப்புகள், பரிகாரங்கள், சாந்திகள் தான் செய்தேன். இப்போது சிவனின் மகிமையை உணர்ந்து கொண்டேன். இனித் தவறு செய்யமாட்டேன்” என்றான் அகிலன்.

“நல்லது மகனே, தேவராசா உங்களைப் பார்த்துத் துன்பப்படுகிறார். அவரை அழைத்துச் செல்” என்றார் கதிரேசன்.

“கட்டாயம் அழைத்துச் செல்வேன்” என்றான் அகிலன்.

**59) அருள் நனி சுரக்கும் அமுதே காண்க**

**60) கருணையின் பெருமை கண்டேன் காண்க**

‘‘மகனே, அருளை அள்ளிக் கொடுக்கும் அமிர்த சொரூபமானவன் சிவன். அவன் கருணைக்கடல் என்று எனது அனுபவங்களால் தினமும் அறிந்து கொண்டிருக்கிறேன். துன்பப்படுபவர்கள் என்னிடம் வந்து சொல்வார்கள். சிலர் அழுவார்கள். அவர்கள் சிவனடியார்கள் என்றபோதும் அவர்கள் தம்மை நம்புவதில்லை. அது மாபெரும் தவறாகும். சிவனை வணங்கவோ, தமது துன்பங்களைச் சொல்லவோ வேறு யாரின் துணையும் தேவையில்லை. ஒவ்வொருவரும் சிவனின்மீது அன்புகொண்டு தமது குறைகளைச் சொல்லலாம். ஆனால் பலர் எனக்கு வந்து சொல்வார்கள். அது மன ஆறுதலுக்காக. மனம் ஆறுதலடையவோ, மகிழவோ, துன்பத்தை நீக்கவோ இன்னொரு அன்புள்ளத்தை நாடும். தனது மனதில் உள்ளதை வெளியேற்றிவிட்டால் நிம்மதியும் மகிழ்வும் கிடைக்கும் என்று நம்பும் தேவராசா சிறந்த சிவபக்தன். அவன் நான் சொல்வதை மிக்க மகிழ்வுடன் ஏற்பான். அதனால் ஆறுதல் அடைவான். அவன் தன் மகளுக்குப் பிள்ளை பிறக்கும் என்று நான் சொல்லியதும் தனது பிள்ளையைப் பார்க்க விரும்பினான். அவனின் மனைவி பார்வதி நான் சொன்னதும் அவள் கர்ப்பவதியாகிவிட்டாள் என்று நினைத்து அவளைப் பராமரிக்க விரும்புகிறாள். இது தான் தாய்மை. கடவுள் கருணைக்கடல். விருப்பு வெறுப்பில்லாதவர். எல்லா உயிர்களும் இன்பமாக வாழவேண்டும் என்று நினைப்பவர். இதைப் பக்தர்கள் உணர்ந்தாலும் தமது பக்தி மேலானது அல்ல என்ற எண்ணமுடையவர்கள். அதனால்தான் இன்னொருவரின் துணையை நாடுகின்றனர். சிவன் தன்மீது அன்பு செலுத்துபவர்களைப் புரிந்து கொண்டாலும், ஏற்றகாலம் வரும்போதுதான் அருள் செய்வார். அதுவரை நாம் பொறுமையுடன் பிரார்த்தித்தல் வேண்டும். தொடர்ந்து பிரார்த்தியுங்கள். மேலான நிலையை அவனருளால் பெறுவீர்கள்” என்றார் கதிரேசன்.

**61) புவனியில் சேவடி தீண்டினன் காண்க**

**62) சிவன் என யானும் தேறினன் காண்க**

**63) அவன் எனை ஆட்கொண்டு அருளினன் காண்க**

மகள் கர்ப்பமானதை அறிந்ததும் தேவராசாவும் பார்வதியும் கதிரேசனின் வீட்டுக்கு மிக்க மகிழ்வுடன் வந்தனர். தேவராசாவின் கையில் ஒரு பொதி இருந்தது, "நான் மகிழ்வின் உச்சத்தில் இருக்கிறேன். அதனால் சிவனுக்குப் பொங்கிப் படைத்தேன்" மாணிக்கவாசக சுவாமியார்; "அடியேன் பொருட்டு ஆண்டவன் தனது சிவந்த திருவடி நிலத்தை என்னைத் தொடும்படி செய்தான். அவனைச் சிவனென நான் தெரிந்து கொண்டேன். அதனால் அவன் என்னை ஆட்கொண்டான் என்று திருவாசகத்தில் கூறுகிறார். அது உண்மை. சிவனை நம்பி முழுமனதுடன் தொழுபவர்களுக்கு இத்தகைய அரியநிலை ஏற்படும். தூய்மையான உறுதிபொருந்திய மனம் உடையவர்களுக்குச் சிவனால் அருள் அனுக்கிரகிக்கப்படுகிறது. அதனால் அவர்களது வாழ்வு மேன்மை அடைகிறது. இந்நிலை பக்திவசப்பட்ட எல்லோருக்கும் வரும் என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொல்வார். அது உண்மை. இளமைக்காலத்திலிருந்தே நான் எனது தந்தையைப் போலச் சிவனை ஆராதிப்பேன். எனது தந்தை பெரும் சிவபக்தர். அவர் சொல்வார், "சிவனின் அடியவனுக்கு வினைப்பயனால் துன்பங்கள் வரும். அப்போது, சிவனை முன்பைவிடத் தீவிரமாக வணங்க வேண்டும். அப்படி வணங்கினால் சிவன் நினைத்ததைத் தருவான்" என்பார். எனக்கு எனது மகள் அகிலனைக் காதலிக்கும்போதே துன்பங்கள் வரத்தொடங்கிவிட்டன. தாயும் பிள்ளையும் ஒன்றானாலும் வாயிறும் வயிறும் வேறு என்பர். நான் பெரும் சிவபக்தனாக இருந்தும் காயத்திரி சிவனை நம்பாதவளானமையால் தான் இவ்வளவு துன்பங்களும் அவளுக்கு ஏற்பட்டது. அதை விலக்கும்படி சிவனை மன்றாடுவேன். சிவன் கருணைமிக்கவர். அதனால்தான் மாணிக்கவாசகருக்குத் தனது சிவந்த திருவடியை நிலத்தில் தொடும்படி செய்தான். அதுபோலச் சிவன் நான் கொண்ட அன்பிற்காகத் தனது திருவடியை எனது மகளின் மீதும் மருமகனின் மீதும் தொடச் செய்துள்ளான். இப்போது இருவரும் சிவன்கோவிலுக்குச் செல்கின்றனர். மதுவையும் மாமிசத்தையும் உண்பதை விட்டுவிட்டுச் சிவபூசை செய்கின்றனர். இது எனக்குப் போதும். பணம், பொருளால் கிடைக்காத மகிழ்வும், நிம்மதியும் இப்போது கிடைத்துள்ளது. பார்வதி மிக்க மகிழ்வுடன் இருக்கிறாள். இது போதும். இது போதும்" என உணர்ச்சி வசப்பட்டார் தேவராசா.

**64) குவளைக் கண்ணி கூறன் காண்க**

**65) அவளும் தானும் உடனே காண்க**

அன்று ஆச்சிரமத்திற்கு வந்த சிவஞானமும் அவனது மனைவி கார்த்தியாயினியும் மகன் திருநீலனும் சிவனை வணங்கிவிட்டுக் கதிரேசனிடம் வந்தனர். திருநீலனுக்கு வயது ஐந்து. அவன் கதிரேசனைக் கண்டதும் மகிழ்வுடன் ஓடிவந்து அவரின் மடியில் ஏறி அமர்ந்தான். சிவஞானமும் கார்த்தியாயினியும் கடும் கறுப்பு நிறத்தவர்கள். ஆனால் திருநீலன் நல்ல சிவந்த நிறத்தவன், மகிழ்வானவன். சிவஞானம் கதிரேசனின் அருகில் வந்து கதிரேசனை வணங்கிவிட்டுக் கேட்டான்; "ஐயா, நீங்கள் பெரியவர். சகலதும் அறிந்தவர். என்னைப் பற்றியும், எனது மனைவியைப் பற்றியும், எனது குடும்பங்களைப் பற்றியும் தெரிந்தவர். எனக்கு ஒரு சந்தேகம் நெடுநாளாக இருந்து வருகிறது. அதனால் துன்பம் எதுவும் இல்லை. இருப்பினும் அதை அறிய விரும்புகிறேன். என்னைவிட அதை அறிவதில் எனது மனைவி கூடுதல் ஆர்வம் காட்டுகிறாள். நாமிருவரும் கரிய நிறத்தை உடையவர்கள். எமது பரம்பரையும் அப்படித்தான். அப்படியிருக்கத் திருநீலன் எப்படிச் சிவந்த நிறமுடையவனாக இருக்கிறான்...?"

கதிரேசன் சிரித்தார் பின்பு சொன்னார்; "மகனே, உனது பரம்பரையில் உனக்கு உனது தந்தையைப் பற்றியும், தந்தையின் தந்தையைப் பற்றியும் தான் தெரியும். உனது கொப்பாட்டனைத் தெரியுமா....? அவரின் பெயராவது தெரியுமா....? நான் சிறுவயதாக இருக்கும்போது அவரின் வீட்டுக்குப் போவேன். அப்போது அவருக்கு எண்பது வயதிருக்கும். அவருக்கு முருகையா என்று பெயர். முருகனைப்போல அழகுள்ளவராக இருந்தார். அவரை நான் எழுபது வருடங்களுக்கு முன்பு கண்டேன். சிறுவர்களை அழைத்து மகிழ்வுடன் பேசுவார். ஒழுக்கமாக வாழும்படி கூறுவார். அதனால்தான் நான் ஒழுக்கமுள்ளவனாக வாழப் பழகினேன். உபநிடதம் ஒன்று கூறுகிறது. முதல் முறையில் சிவனால் படைக்கப்பட்ட நெல்மணியின் சாயல் தற்போதுள்ள நெல்லிலும் காணப்படும் என்று. தமது மூதாதையரைப்போலப் பின்சந்ததி பிறக்கும். இது ஆச்சரியமல்ல. குவளைப்பூவை ஒத்த கண்களையுடைய அம்பிகையின் பாகன் சிவன். அவர்கள் இருவரும் உருவத்தில் ஒன்று என்பதை அறிந்து கொள். சிவன் தான் அம்பிகை. அம்பிகை தான் சிவன். இது பிரிக்க முடியாத இணைப்பு. அதனால் தான் மனிதர்களும் குணம், சாயல், தோற்றத்தில் ஒன்றுபட்டவர்களாக இருக்கின்றனர். உனக்கு ஏழு சகோதரர்கள். ஊரிலுள்ளவர்கள் அல்ல, வேற்றூரவர்களும்

அவர்களைக் கண்டால் இவர்கள் சகோதரர்கள் என்று தோற்றத்தை வைத்துக் கண்டு கொள்வர். உனது இளைய சகோதரன் தனது ஏனைய பிள்ளைகள் போல இல்லை. அவர்கள் ஒழுக்கமானவர்கள். இவன் மது அருந்துகிறான் என்று உனது தந்தை கவலைப்படுவார். இது அவனது செயற்கையால் உருவானதே தவிரப் பரம்பரையால் உருவானதல்ல. அவன் சில தீயவர்களுடன் சேர்ந்து படித்ததால் வந்தது. சிவனையும் அம்பிகையையும் பிரிக்க முடியாததுபோல மனிதனையும் பரம்பரையையும் பிரிக்க முடியாது. உனது கொப்பாட்டன் வந்து பிறந்திருக்கிறார்" என்று கதிரேசன் சொல்லச் சிவஞானம் மிகுந்த மகிழ்வுடன் திருநீலனைத் தூக்கி முத்தமிட்டான். அவனது மனம் என்றுமில்லாதவாறு குதூகலித்தது.

**66) பரம ஆனந்தம் பழம் கடல் அதுவே**

**67) கரு மா முகிலின் தோன்றி**

**68) திரு ஆர் பெருந்துறை வரையில் ஏறி**

**69) திருத்தகு மின்ஒளி திசை திசை விரிய**

"மகனே, சிவனின் சக்தியாகிய அம்மை சிவனோடு பிரியாத நிலையில் இருப்பதால் பிரபஞ்சம் எங்கும் பொலிகின்ற பரமானந்தம் ஆழ்கடல் போன்று அளப்பரியது. அதன் விரிவுக்கு அளவேயில்லை. கரிய மேகத்திடையே சூரியன் உதித்து இருளைப் போக்குவது போலச் சிவன் திருப்பெருந்துறையில் உள்ள மலையில் தோன்றி தனது ஞானப் பிரகாசத்தை நான்கு திசைகளிலும் ஒளிரச் செய்கிறான் என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். கரிய மேகக்கூட்டத்தை விலக்கி உலகெங்கும் பிரகாசத்தைக் கொடுப்பவன் சூரியன். சூரியன் என்பது சிவன். சிவன் தான் சிவசூரியனாகத் தோன்றி கரிய இருளையும், துன்பங்களில் இருந்து வரும் இருளையும் அகற்றுகிறான். திருப்பெருந்துறையில் இருந்து வெளிப்படும் ஞான ஒளிதான் உலகைக் காக்கிறது. இதற்கு உதாரணமாக வெளிநாடுகளிலிருந்து ஒலிபரப்பப்படும் ஒலிவகைகளையும், அதேநாடுகளில் இருந்து ஒளிபரப்பப்படும் செய்திகளையும், படங்களையும் வானொலி மூலமும், தொலைக்காட்சி மூலமும் நாம் பார்க்கிறோம், கேட்கிறோம். அதுபோலத் திருப்பெருந்துறையில் இருக்கும் மலையில் இருந்து சிவனால் வெளிப்படுத்தப்படும் ஞானஒளியை மனிதர்கள்

ஞானக்கண்மூலம் தெரிந்து கொள்ள வேண்டும். ஞானக் கண்ணைப் பெறாதவர்கள் தமது மனதின் மூலம் உணர்ந்து கொண்டால் அவர்களுக்குக் காலகதியில் ஞானக் கண் உண்டாகும். இதை எல்லோரும் நம்பமாட்டார்கள். நம்பியவர்கள் சிவனோடு இருப்பார்கள்" என்றார் கதிரேசன்.

**70) ஐம்புலம் பந்தனை வாள் அரவு இழிய**

"மகனே, ஐம்புலன்கள் தம் இச்சைக்கேற்ப மனிதனை ஆட்டிப் படைக்கின்றன.அறிவாளியாகவோ,கல்வியறிவாளனாகவோ, பகுத்தறிவாளனாகவோ, ஞானியாகவோ இருந்தாலும் ஒரு கணம் தடுமாறினால் அவனது வாழ்க்கை பாழாகிவிடும். உலகோடு மனிதனைப் பந்தப்படுத்துவது புலன்கள். ஒரு பழத்தை உண்ண வேண்டும் என்று ஆசைப்படுவது, ஒரு குடும்பப் பெண்ணை ஆசைப்படுவதற்கு ஒக்கும். ஆசை என்பதில் சிறிது பெரிது என்றில்லை. சிறிய ஆசைதான் வளர்ந்து பேராசையாகிறது. எனக்குத் தெரிந்த ஒரு கல்விமான் இருந்தார். அவருக்கு வயது எழுபது. மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள் கூட அவருக்குண்டு. அவ்வூரில் கல்வி கற்கும் மாணவர்கள் அவரிடம் விளங்காததைக் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். அவர் மிகுந்த ஒழுக்கசீலர். அதனால் மாணவிகள் கலகலப்பாகச் சிரித்துப் பேசுவார்கள். அவரிடம் வந்து கல்விகற்கும் ஆர்த்திகா நல்ல அழகி. அவருடன் மிகவும் மகிழ்வாகப் பேசுவாள். தமது வீட்டில் விசேடமாக உணவு தயாரித்தால் கொண்டு வந்து கொடுப்பாள். தொட்டும் பேசுவாள். அதனால் அந்தக் கல்விமானின் மனம் சலனப்பட்டது. பின் அவள் தன்னைத் தொட்டுப் பேசாளா என்று ஆசைப்பட்டது. ஒருநாள் அவள் தொட்டுப் பேசும்போது அவளின் கையைப் பிடித்து முத்தமிட்டார். அவள் அதைப் பெரிதாக எடுக்காமையால் அவளை அணைத்து முத்தமிட முயன்றார். ஆர்த்திகா தடுமாறிப் போனாள். அவளால் அதை நம்பமுடியவில்லை. கையைப் பறித்துக்கொண்டு சென்று விட்டாள். அதன்பின் அவள் அங்கு வருவதில்லை. அதனால் பயந்த அக்கல்விமான் தற்கொலை செய்து கொண்டார். ஆர்த்திகா என்னுடனும் அன்பாகப் பழகுபவள். அவர் இறந்த பின்பு பயம் காரணமாக எனக்குச் சொன்னாள். நான் இதை வெளியே சொல்லவில்லை உனக்குச் சொல்கிறேன். அதுவும் அந்தக் கல்விமானின் பெயரைச் சொல்லாமல் ஆர்த்திகா என்பது புனைபெயர். அதனால் ஐம்புலன்கள் என்ற பாம்பு மனிதனை முழுமையாக விழுங்கிவிடுவதால் அவனால் சாதாரணமாகச் செய்யக்கூடிய செயல்களைக்கூடச் செய்யமுடியாது. இதனால்

தான் மனிதன் பாவங்கள் என்று அறிந்தும் அதனைச் செய்கிறான். இவற்றைத் தவிர்க்க வேண்டுமென்றால் புலன்களை அடக்க வேண்டும். புலன்களையல்ல உலகையே அடக்கி ஆழ்பவன் சிவன். அதனால் சிவனைத் தொழுபவனின் புலன்கள் தாமாகவே அடங்கிவிடும்" என்றார் கதிரேசன்.

**71) வெம்துயர்க் கோடை மாத்தலை கரப்ப**

கதிரேசனும் சிவஞானமும் கதைத்துக் கொண்டிருந்தபோது அகிலனும் காயத்திரியும் அங்கு வந்தனர். அகிலன் சிவஞானத்தினது இரத்த உரித்தினன். அவன் எப்பொழுதும் சிவஞானத்தைக் கேலி செய்வான். அவன் நீறு பூசுவதையும், விரதம் அனுட்டிப்பதையும், சிரமதானம் செய்வதையும் கேலி செய்வான். அப்போது சிவஞானம் சொல்வான்; "நீ முற்பிறப்பில் செய்த புண்ணியத்தால் பெரும் பணக்காரியைத் திருமணம் செய்துள்ளாய். அதனால் எல்லாவற்றையும் சொல்வாய். நான் ஏழை. நீ சொல்வதற்குப் பதில் சொல்ல முடியுமா…? இல்லை சொன்னால்தான் ஏற்பாயா…? இன்பமும் துன்பமும் இரவும் பகலும் போன்றது. அது சிவனின் அருளால் மாறக்கூடியது. அப்படி மாறி நான் தனவந்தனாக வந்தாலும் ஏழைகளுக்கு உதவுவனே தவிர அவர்களைக் கேலி செய்யமாட்டேன். தாங்கமுடியாத கோடைகாலம் போன்று என்னை வருத்துகின்ற வறுமை சிவனருளால் அழியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு" என்று சொல்லிவிட்டுச் சென்றுவிடுவான். தொடர்ந்து நின்றால் அவன் சொல்லும் சிவநிந்தனையைத் தாங்கிக்கொள்ள முடியாது. எந்தத் துன்பம் வந்தாலும் நான் கடவுளை வணங்க மாட்டேன். கோவிலுக்குச் செல்லமாட்டேன். நீறு அணியமாட்டேன் என்றவன் நீறணிந்து பயபக்தியுடன் ஆச்சிரமத்திற்கு வந்ததைப் பார்த்தான். அவன் அதை எதிர்பார்த்தவன். ஆனால் இவ்வளவு சீக்கிரம் அது நடைபெறும் என நினைக்கவில்லை. அகிலன் சொன்னான்; "காலம் மனிதனை மாற்றி விடுகிறது. இது தெரியாததால்தான் நான் உன்னைக் கேலி செய்தேன். என்னை மன்னித்துக் கொள்"

"எல்லாம் சிவன் செயல் என்று நினைப்பவன் நான். துன்பத்தைத்தரும் சிவன்தான் இன்பத்தையும் தருகிறான். இன்பம் வரும்போது மகிழ்வது போலத் துன்பத்தையும் மகிழ்வுடன் ஏற்றால் துன்பத்தால் வரும் இடர்களைச் சிவன் நீக்கிவிடுவான். இதற்கு நம்பிக்கை வேண்டும். நீயல்ல எல்லோரும் ஒரு நாளைக்கு மாறுவார்கள். அவர்கள் மாறும்வரை மற்றவர்கள் காத்திருக்க வேண்டும்" என்றான் சிவஞானம்.

## 72) நீடு எழில் தோன்றி வாள் ஒளி நிமிர

சிவஞானம் தொடர்ந்து சொன்னான்; "ஒழுக்கமாக வாழ்ந்து கடவுளை வழிபடுவோர் துன்பங்களைக்கண்டு பயப்பட மாட்டார்கள். தெய்வத்துடன் அவர்கள் இணைந்திருப்பதால் அவர்களுக்குத் துன்பத்தினால் உண்டாகும் முகவாட்டமும், துன்பமும் எதையும் செய்யாததால் அவர்களது முகப்பொலிவும், அழகும் ஒருபோதும் குறையாது". நீ என்னைக் காணும்போதெல்லாம் "பெரும் வறுமையிலும் நீ மகிழ்வுடன் இருக்கிறாய். முகம் பொலிவுடன் இருக்கிறது. உனது மனைவி மற்றவர்களுடன் மகிழ்வுடன் கதைக்கிறாள். சிரிக்கிறாள். இது எப்படிச் சாத்தியமாகும். அவள் நல்ல நடிகை" என்பாய். நீயே கேள்வியையும் கேட்டுப் பதிலையும் சொல்வாய். அதனாலும் எதைச் சொன்னாலும் அதற்கு முரணான பதிலை நீயே சொல்லுவதாலும் நான் உனக்குப் பதில் சொல்ல விரும்புவதில்லை. நான் சிவபக்தன். சிவனிடம் முறையிட்டுவிட்டு எனது தொழிலைப் பார்ப்பேனே தவிர யாரையும் குறைசொல்ல மாட்டேன். இப்போ உனக்குப் பெருந்துன்பம் வந்துவிட்டது. வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதனால் நான் துன்பங்கள் வருமென்று நினைத்துச் சிவனை வணங்கி வருகிறேன். அவை எமக்குத் துன்பமாகத் தோன்றாததால் தான் எனது மனைவி மகிழ்வுடன் கதைப்பாள், சிரிப்பாள். துன்பப்படுவதால் துன்பங்கள் தீரமாட்டாது. மகிழ்வுடன் இருந்தால் துன்பம் உண்டாகாது. எமக்கு மூன்று வேளையும் நல்ல உணவும், உடுபிடவைகளும், தேவையானவையும் கிடைக்கின்றன அதுபோதும். உன்னிடம் கோடிக்கணக்கான சொத்திருக்கு. நீயும் உனது மனைவியும் ஒரு கணமென்றாலும் மகிழ்வுடன் இருந்தீர்களா…? மகிழ்வுடன் இருந்தவர்களுடன் சிரித்துக் கதைத்திருப்பீர்களா…? நிறைகுடம் தழும்பாது என்பார்கள். அதுபோல நிறைந்த மனது துயரப்படாது. அதைத் துயரப்படுத்தச் சிவன் விடான். மனிதனைத் தவிர்ந்த ஏனைய உயிர்கள் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதில்லை. விடிந்ததும் இறைவன் உணவைத் தருவான் என நினைக்கின்றன. மனிதன் தான் தனது மூன்றாவது சந்ததிக்கும் கள்ளத்தனமாகச் சொத்துச் சேகரிக்க நினைக்கின்றான். அதனால் தான் துன்பப்படுகிறான். தான் படைத்த உயிரைக் காப்பாற்ற இறைவனுக்குத் தெரியும் என்று நினைப்பவன் பெருமகிழ்வுடன் வாழ்கிறான். இப்போதாவது இறை நினைவு உனக்கு வந்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்றான் சிவஞானம்.

**73) எம் தம்பிறவியில் கோபம் மிகுத்து**

‘‘சிவஞானம், மானிடப்பிறவி அரிதானது. மானிடப்பிறவி எடுத்தவர் அனுபவிக்கக்கூடிய இன்பங்களையெல்லாம் அனுபவித்துவிட வேண்டும். மானிடப்பிறவியில் இளமைக்காலம் மிகமிக முக்கியமானது. அந்தக்காலத்தில் அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவிக்க வேண்டும். பின்பு முதுமை வந்தால் எதுவும் செய்ய முடியாது. வீணாக வீபூதியைப் பூசிக்கொண்டு வீண்கதைகளைப் பேசிக் கொண்டுதிரியாது அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவி” என்பாய். நான் அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவித்து விட்டேன். அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். நீ எதை இன்பம் என்கிறாய்…? குடிப்பதும், மாமிசம் உண்பதுவும், பெண்களுடன் சல்லாபமிடுவதும் தான் இன்பம் என்று நினைத்துத் துன்பத்துக் குள்ளாகின்றாய். உனது பணமும், உனது சல்லாபமும் உன்னை மகிழ்ச்சியடைய வைத்ததா என்று பிற்காலத்தில் சொல். மனிதனாகப் பிறந்து முப்பது வருட வாழ்வில் நீ எத்தகைய துன்பங்களை அனுபவித்தாய் என்று உனக்குத் தெரியுமோ தெரியாதோ என்று எனக்குத் தெரியாது. நீ குடித்துவிட்டுக் கலகம் செய்தபோது எத்தனைமுறை அடிவாங்கி இருப்பாய். எத்தனைமுறை காவல்துறைக்குச் சென்றிருப்பாய். எத்தனைபேர் உன்னைத் திட்டியிருப்பர்கள். இவை தானா இன்பம்? நான் மனைவியோடும், பெற்றோருடனும், நண்பர்கள், அயலவர்களுடனும் அன்புடன் நடப்பதால் அவர்கள் என்னை மதிக்கின்றனர். அவர்கள் என்மீது செலுத்தும் அன்பால் சொர்க்கத்தில் இருப்பதுபோல இருக்கும். அப்படியே வாழ வேண்டும். வாழ்ந்து சிவனது திருவடியை அடைந்து நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டும் என்பதே எனது விருப்பம். கெட்டவனாக வாழ்ந்து திரும்பத் திரும்பப் பிறந்து துன்பங்களை அனுபவிப்பதை நினைக்க அருவருப்பாக உள்ளது என்று நான் கூறும்போது பகிடி பண்ணும் நீ இன்று உண்மையை உணர்ந்தது மகிழ்வைத் தருகிறது” என்றான் சிவஞானம்.

**74) முரசு எறிந்து மாப்பெரும் கருணையின் முழங்கிப்**

‘‘அகிலா, நீ எப்போதும் மனிதர்களைத் தவறாகத்தான் எடை போடுவாய். உனது உயிர் நண்பனாக இருந்த வாமதேவனைச் சகல விடயங்களிலும் நம்பி உனது வியாபாரப் பொறுப்பை அவனிடம் கையளித்தாய், அப்போது உனது மாமனார் தேவராசா அவனிடம் பொறுப்பைக் கொடுக்காதே. அவனது பரம்பரையே

துட்டப்பரம்பரை. அவனது தகப்பன் தனது தம்பியாருக்கு மதுவைக் கொடுத்து மயக்கித் தோட்டக்காணியைக் கைப்பற்றியவர். அவனது தாய் பெற்றோரைப் பராமரிக்காததால் அவர்கள் மடத்தில் இருந்தவர்கள். வாமதேவன் ஊர் முழுவதும் கடன் பட்டவன். யாருக்கும் திருப்பிக் கொடுக்காததால் நீதிமன்றத்தில் வழக்குகள் பல உண்டு என்ற போதும் நம்பாது அவனிடம் பொறுப்பைக் கொடுத்ததால் அவன் பல இலட்ச ரூபாவைக் கையாடியவன். ஊரே மெச்சுகின்ற கதிரேசனைக் கள்வன் என்று கூறிய முதல் ஆள் நீ. சிவனை வழிபட்டுப்பார். அவர் விருப்பு வெறுப்பு இல்லாதவர். பற்றில்லாதவர். அவர் கொடுப்பதானால் அள்ளிக் கொடுப்பார். கணக்குப் பார்க்க மாட்டார். யாருக்கும் பயப்படவும் மாட்டார். எதையும் எண்ண மாட்டார். அப்படியானவரை மாணிக்கவாசகர் என்ன சொல்கிறார் தெரியுமா, "தாயைவிட என்மீது அளவில்லாத பாசத்தைக் கொண்டுள்ள சிவன் என்னை ஆட்கொண்ட தன்மை பற்றிக் கூறும்போது சிவன் உலகமெங்கும் நான் மாணிக்கவாசகனை ஆட்கொள்ளப் போகிறேன் என்று முரசுமூலம் அறிவித்துவிட்டே ஆட்கொண்டவர்" என்று கூறுகிறார். பற்றின்றியும், நியாயமாக நடப்பதாலும் தான் பகிரங்கமாகச் சிவன் அறிவித்தவர். இது இறைவனின் திருவிளையாடல். பலர் இறைவனான சிவன் எம்மைவிட வேறுபட்டவர் என நினைக்கின்றனர். அப்படியல்லச் சிவன் எம்மோடு இருப்பவர். எமது சுகதுக்கங்களில் கலந்து கொள்பவர். எம்மை ஊக்குவிப்பவர். எமக்காக எதையும் செய்யத் தயங்காதவர். அப்படியான சிவனை நீ உணர்ந்தமையையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்" என்றார் சிவஞானம்.

### 75) பூப்புரை அஞ்சலி காந்தாள் காட்ட

''அகிலா, நீ உனது கையைக் குவித்து சிவனை வணங்கு. உனது கூப்பிய கைகளானது சிவனுக்கு அழகிய கார்த்திகைப் பூவைப்போலத் தெரியும். அது ஒரு போதும் வாடாது. உன்னைப்போன்ற பலர் இறைவனுக்குப் பெறுமதியான பொருட்களைக் கொடுத்து வணங்க வேண்டுமென்று நினைக்கின்றனர். அதனால் பல வர்த்தகர்கள் பொருட்களில் கலப்படம் செய்து விற்பனை செய்துவிட்டு அதிலிருந்து வரும் வருமானத்தில் ஒரு சிறு தொகையைச் சிவனுக்கு வாகனம் செய்து கொடுக்கின்றனர். மடத்தில் அன்னதானம் கொடுக்கின்றனர். அதனால் சிவன் தமக்கு அள்ளித் தருவாரென நினைக்கின்றனர். அரிசியில் கல்லைக் கலந்தால் அதனால் வரும் நற்பலன் கல்லுக்கலந்த அரிசியை வாங்கியவனுக்கே செல்லும். பாலில் நீரைக் கலந்தாலும் அதை வாங்கியவனுக்குத்தான் பலன் சேரும். இந்த உண்மையை யாரும் உணர்வதில்லை. எல்லாவற்றையும் படைத்த சிவனுக்குத் தனக்குத்

தேவையானவற்றையும் படைத்து அனுபவிக்கத் தெரியாதா…? சிவனுக்கு எதுவும் தேவை இல்லை. ஏனெனில் எல்லாவற்றையும் படைப்பவன் அவன். அவன் உருவமில்லாதவன், பிறக்காதவன், இறக்காதவன். அதனால் அவனுக்கு உணவு தேவையில்லை. உள்ளக் கமலத்தைத்தான் அவன் விரும்புவான். இதைப் பலரும் உணர்வதில்லை. ஆச்சிரமத்திற்குத் தினமும் பலர் வருகிறார்கள். சுவாமியாரின் அருளுரையைக் கேட்கிறார்கள். அவற்றைப் பின்பற்றினால்தான் பயன் கிடைக்கும். கேட்பதால் எந்தப் பயனும் உண்டாகாது. நான் சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் சுவாமியாரின் அருளுரையைக் கேட்பேன், "அவனைச் சுத்தமான மனதுடன் வணங்குங்கள். உங்களைச் சிவன் அறிவார். அதனால் அவருக்கென எதையும் கொடுக்க வேண்டும் என எண்ணாது சிவனடியார்களை உபசரியுங்கள். ஒவ்வொரு ஏழையின் உள்ளத்திலும் இருக்கும் சிவன் நீங்கள் ஏழைகளுக்குச் செய்யும் உதவிகளைத் தனக்குச் செய்வதாக நினைப்பார்" என்று கூறுவார். அதனால் நீ பணக்காரன் என்று நினைத்து அகம்பாவம் கொள்ளாதே. மாணிக்கவாசகர் தனது கூப்பிய கைகளைச் சிவன் என்றும் வாடாது கூம்பியிருக்கும் கார்த்திகைப் பூவாக நினைக்கிறார் என்று திருவாசகத்தில் கூறுகிறார். இது ஏழைகளுக்காகச் சொல்லப்பட்டது. ஏழைகள் தமது ஏழ்மையின் காரணமாக வணங்காமல் விடக்கூடாதென்பதற்காகவே மாணிக்கவாசகர் அப்படிக் கூறினார்" என்றார் சிவஞானம்.

**76) எஞ்சா இன் அருள் நுண்துளி கொள்ளச்**

''சிவா, நீ சொல்வதைக் கேட்டிருந்தால் நான் நட்டமடைந்திருக்க மாட்டேன். அத்துடன் குடும்பத்தில் குழப்பங்களும் ஏற்பட்டிராது. இப்போதென்றாலும் புத்தி வந்தது சிவனின் அருள்தான்" என்றான் அகிலன்.

"எதற்கும் வேளை வரும் என்று காத்திராது சந்தர்ப்பம், சூழ்நிலைகளை நாம் உண்டாக்கிக் கொள்ளல் வேண்டும். ஒரு கணம் சிவனை நினைத்து ஐந்தெழுத்தை ஓதினால் சிவன் மனதுக்குள் வந்துவிடுவான். அதன்பின் ஐந்தெழுத்தின் மகிமையால் மனம் முழுவதையும் சிவ உணர்வு நிரப்பிவிடும். அது நிரம்பினால் வேறு எந்த நினைவும் வராது. மெய்சிலிர்க்கும். ஆனந்தக் கண்ணீர் சுரக்கும். அவை உலகை மறையச் செய்யும். அப்போது நாமும் சிவனும் தான் தனித்திருப்போம். ஒரு காதலனும் காதலியும் தனித்திருப்பதைப் போன்ற உணர்வு உண்டாகும். சுத்தமான மனதையுடைய காதலர் ஒருவரை ஒருவர் பார்த்து மெய்மறந்து இருப்பதைப் போலச் சிவனைப் பார்த்து

மெய்மறக்கும் நிலை உண்டாகும். அந்த நிலை பரவசமான நிலை. அதை அனுபவித்தால் தான் புரியும்" என்றார் சிவஞானம்.

**77) செம்சுடர் வெள்ளம் திசை திசை தெவிட்ட வரை உறக்**

சிவா, நீ சொல்வாய் சிவனது செவ்விய ஞானப் பிரகாசம் மலை மீது வைத்த விளக்கு போன்றது. அதை எந்தத் திசையில் இருந்தும் பார்த்துத் தெளிவடையலாம் என்பாய். அப்போதெல்லாம் எனக்குச் சிரிப்பு வரும், நான் உன்னை அப்போது கண்டபடி கேலி செய்வேன். அப்போதும் கோபப்படாமல் சொல்வாய், "உன்னைப் போலத்தான் பலர் சொன்னவை. துன்பங்கள் வந்து விட்டால் நீறணிந்து திருமுறைகளை ஓதத் தொடங்கி விடுவார்கள் என்று. இன்பமாக இருக்கும்போது அதைக் கொண்டாடப் பலர் வருவார்கள். துன்பம் வந்து விட்டால் எல்லோரும் தங்களிலும் அத் துன்பங்கள் பொறுத்துவிடும் என்று நினைத்து விலகிச் சென்று வீடுவார்கள். என்னோடு கூட இருந்து குடித்து வெறித்த யோகநாதன் நான் கடனாளியாகி விட்டேன் என்று அறிந்ததும் விலகிச் சென்றுவிட்டான். அவனைத் தேடி வீட்டுக்குச் சென்றால் அவனது மனைவி அவன் வீட்டுக்குள் இருந்தாலும் இல்லை என்பாள். எனது துன்ப துயரங்களைக் கேட்க யாரும் இல்லை. இப்போ சிவனோடு உறவு ஏற்பட்ட பின் எல்லாவற்றையும் சிவனுக்குச் சொல்கிறேன். அவர் கேட்கிறாரோ தெரியாது. எனக்கு ஆறுதலாகவும் நிம்மதியாகவும் இருக்கிறது. நல்ல மனிதர்களின் உறவு ஏற்பட்டிருக்கிறது. குன்றின் மேல் வைத்த விளக்காக இருக்கும் சிவனை நான் உணர்ந்து கொள்ளப் பல காலம் எடுத்துவிட்டது" என்றான் அகிலன்.

"இவையெல்லாம் மனிதரின் இயல்புகள். அதைத் தெரியாதவர்கள் தான் மனிதரை நம்பிக் கெட்டழிகிறார்கள். இப்போதாவது அதை நீ உணர்ந்து கொண்டாய். இனி உனக்குத் துன்பம் ஏற்படமாட்டாது" என்றான் சிவஞானம்.

**78) கேதம் குட்டம் கை அற ஓங்கி**

அன்று வெள்ளிக்கிழமை. ஆச்சிரமத்தில் உள்ள சிவன் கோவிலில் அடியார்கள் நிரம்பிக் காணப்பட்டனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவனுக்குப் பூசை செய்து முடித்துவிட்டு வெளியே வந்து வேப்பமரநிழலில் அமர்ந்தார். அவருக்கு அருகில் கதிரேசன் வந்து அமர்ந்தார். அடியார்கள் சுவாமியிடம் ஆசி பெற்றுக் கொண்டிருந்தனர். அகிலன் சுவாமியின் பாதங்களைத் தொட்டு வணங்கிவிட்டு கையை நீட்டினான். சுவாமியார் அவனது தலையில் நீற்றை இட்டு விட்டுக்

கையிலும் கொடுத்தார். பின்பு, “உனது துன்பங்கள் எல்லாவற்றையும் சிவன் போக்குவார்” என்றார். அவன் வெளியே வந்தபோது அவனது நண்பன் நகுலன் வந்து சொன்னான்; “அகிலா எனக்குச் சிவனில் நம்பிக்கையில்லை. சுவாமியாரும் கதிரேசனும் அவரோடு சேர்ந்த சிலரும் சிவனைச் சாட்டிப் பிழைப்பு நடத்துகிறார்கள். நான் கடைசி வரையும் ஆச்சிரமத்திற்கு வரவும் மாட்டான். சுவாமியாரை மதிக்கவும் மாட்டான். கடவுளை வணங்கவும் மாட்டன்’ என்றாய். இப்போ ஏன் வந்தாய்? நான் சிவபக்தன். நான் சொல்வது எதையும் நீ கேட்பதில்லை. அது பரவாயில்லை. என்னைக் கேலி செய்வாய். சுவாமியாரைப் பரிகசிப்பாய். கதிரேசனை அவமதிப்பாய். இப்பேன் அவர்களை விழுந்து கும்பிடுகிறாய்? சிவன் எமக்கு வரும் துன்பங்களை இன்பமாக்குபவன். அதுவும் பேரின்பமாக்குபவன். எனக்கு ஒரு துன்பம் வந்தால் அது சிவனை நினைத்ததும் பேரின்பமாக மாறிவிடும். நான் ஒரு பாடசாலையின் அதிபராக இருந்தேன். மிகவும் நேர்மையாகக் கடமை புரிந்தேன். என்னைப் பழிவாங்க நினைத்த ஓர் ஆசிரியர் கல்வி அதிகாரிக்கு என்னைப் பற்றித் தவறாகச் சொல்வார். ஆனால் கல்வி அதிகாரி அதை ஏற்பதில்லை. ஒரு கல்வி அதிகாரி குடிகாரன். அவன் எனது நண்பனும் கூட. அவனுக்கு மதுவை வாங்கிக் கொடுத்ததனால் அவன் கல்விப் பணிப்பாளருக்கு என்னைப் பற்றித் தவறாகக் கூறக் கல்விப் பணிப்பாளர் அதை நம்புவது போல நடித்து ஒரு குழுவுடன் பாடசாலைக்கு வந்து சோதனை செய்தார். சோதனையின் பின் என்னை அழைத்து, “நான் உங்களை உதவிக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கிறேன்” என்றார். இதை யாரும் எதிர்பார்க்கவில்லை. நான் தண்டிக்கப்படுவேன் என்றே நினைத்தனர். சிவனின் அருள் அது. சிவன் துன்பத்தைப் பேரின்பமாக மாற்றுவான். இது உனக்குத் தெரிந்தும் நீ மாறவில்லை. இப்போ உனக்குப் பெருந்துன்பங்கள் வந்துவிட்டன. உதவியவர்கள் விலகி விட்டனர். திக்கற்றவனுக்குச் சிவன் துணையாக இருப்பான். அதனால் முழு மனதுடன் சிவனை நம்பு. உனது துன்பங்கள் யாவும் நீங்கும்” என்றான் நகுலன்.

**79) இரு முச்சமயத்து ஒரு பேய்த்தேரினை**

**80) நீர் நசை தரவரும் நெடுங்கண் மான் கணம்**

**81) தவம் பெரும் வாயிடைப் பருகித் தளர் வொடும்**

**82) அவம் பெரும் தாபம் நீங்காது அசைந்தன**

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அன்று ஆச்சிரமத்தில் உரையாற்றினார்; "அன்பான சிவனடியார்களே பெரிய கண்களை உடைய மான் கூட்டம் கோடை காலத்தில் நீருக்காகக் காடு முழுவதும் அலையும். காட்டில் உள்ள வெளிகளில் சூரியஒளி நீரைப் போலத் தோன்றும். அதைக் கானல் நீர் என்பர். அது உண்மையான நீர் அன்று. அதை நெருங்கிச் செல்லச் செல்ல அது விலகி விலகிச் செல்லும். அது உண்மையான நீர் என்று நினைத்து மான்கள் அதை நோக்கி ஓடிச் சென்று ஏமாற்றம் அடையும். கடவுளில் நம்பிக்கை வைக்காத சமயங்கள் பல உண்டு. அவை புறச்சமயங்கள் எனப்படுகின்றன. இப்படியான புறச்சமயத்தவர்கள் பல களியாட்டங்களை நிகழ்த்தி மக்களை ஆதி காலம் தொட்டு ஏமாற்றி வருகின்றனர். இப்போது எமது கிராமத்திலும் அப்படியான நிகழ்வுகள் நடைபெறத் தொடங்கியுள்ளன. சிவனைத் தவிர வேறு தெய்வங்கள் இல்லை. ஏனைய தெய்வங்களெல்லாம் சிவனை வணங்கி அருளையும் வரங்களையும் பெறுகின்றன. இது உங்களுக்குத் தெரியும். இதை நானும் இங்கு பேசுபவர்களும் உங்களுக்குப் பல முறை எடுத்துச் சொல்லியுள்ளோம். தேவதைகளையும் பேயையும் வணங்குபவர்கள் இன்று அதிகரித்துள்ளனர். அவற்றை வணங்குவதால் நன்மை ஏற்படாது. மனக்குழப்பம் தான் உண்டாகும். அதனால் மிகவும் அவதானமாக இருங்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**83) ஆயிடைவானம் பேர் யாற்று அகவயின்**

**84) பாய்ந்து எழுந்து இன்பம் பெரும் சுழி கொழித்துச்**

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அன்று ஆச்சிரமத்திற்கு வந்திருந்த சிவனடியார்களுக்கு உரையாற்றினார். ‘‘சிவனடியார்களே, நம் முன்னோரின் அனுபவங்களை நாம் தெரிந்து கொள்ளல் வேண்டும். ஞானிகள், ரிசிகள், முனிவர்கள் தமக்கேற்பட்ட அனுபவங்களைக் குறித்து வைத்துள்ளனர். அவை பல நூற்றாண்டுகள் கழிந்த பின்பும் நிலைத்திருந்து எமக்கு உபயோகமாகின்றன. முன்பு எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள் வாழ்ந்திருக்கின்றனர். அவர்களுள் பலர் தமது அனுபவங்களை எழுதி வைக்கின்றனர். மன்னர்களின் ஆதரவைப் பெற்ற பலர் எழுதியும், மன்னர்களிடம் பரிசும் விருதும் வாங்கியிருக்கின்றனர். அவை எல்லாம் இன்று எமக்குக் கிடைப்பதில்லை. சிவனருளால் அழியாத வரம் பெற்ற நூல்களே இன்று எமது பார்வைக்குக் கிடைக்கின்றன. அவற்றுள் மிக மிக முக்கியமானது மாணிக்கவாசகரது அனுபவங்கள். அவை இன்னும் ஆயிரமாயிரமாண்டுகள் நிலைத்திருக்கும். அவர் சொல்கிறார், "வானத்தைத் தொடுகின்ற அம்மலையில் இருந்து பெரியதொரு

ஆறு பெருக்கெடுத்து வந்தது. அதில் மகிழ்ச்சியைக் கொடுக்கும் பல சுழிகள் நிறைந்திருந்தன".

**85) சுழித்து எம்பந்தம் மாக்கரை பொருது அலைத்து இடித்து**

"சிவனடியார்களே மேலும் மாணிக்கவாசகர் இவ்வாறு சொல்கிறார். "அந்தக் காட்டாற்று வெள்ளம் சுழித்துச் சுழித்துப் புரண்டோடி வந்து என்னைப் பிறவியிலே தளைக்கின்ற பற்றுக்கள் என்னும் பெரிய கரையின் மீது மோதி, அதை அசைத்து இடித்து விழுத்தியது" என்கிறார். கைலாயமலையில் வீற்றிருக்கின்ற சிவபெருமானது தலையில் ஊற்றெடுத்த கங்கையை அவர் குறிப்பிடுகிறார். அத்துடன் அந்த உயரமான மலையில் வீற்றிருக்கும் சிவனது ஞானஒளி உலகின் நாலாதிசைகளிலும் பரவிப் பக்தர்களை ஆட்சி செய்கிறது என்று முன்னுள்ள பாடலில் கூறுகிறார். சிவன் மீது அன்பு வைத்தால் அந்த அன்பு ஞான வெள்ளமாகி மனதில் உள்ள பற்றுக்களையெல்லாம் அகற்றி விடும். அதற்குச் சான்றாக உள்ளது மாணிக்கவாசகரது வாழ்க்கை. அத்துடன் மாணிக்கவாசகர் இவ்வாறு கூறுகிறார்"

**86) ஊழ் ஊழ் ஓங்கிய நங்கள்**

**87) இரு வினை மாமரம் வேர் பறித்து எழுந்து**

"சிவனடியார்களே, உலகம் படைக்கப்பட்ட போது உயிர்களும் படைக்கப்பட்டன. அந்த உயிர்களுக்கு இரு வேறுபட்ட நிலைகள் உண்டு. ஒன்று சிவனை அன்போடு வழிபட்டுச் சிவனை அடைதல். மற்றது சிவனை வழிபடாமையால் திரும்பத் திரும்ப பிறந்து இறப்பது. உயிர்கள் புதிதாகப் படைக்கப்படுவதில்லை. சிவனது திருவடியை அடையாத உயிர்கள் திரும்பத் திரும்ப பிறப்பதால் ஒவ்வொரு பிறவிகளிலும் செய்யும் பாவங்கள் வினையாக ஒன்று சேர்ந்து வருத்தும். அவ்வினைகளை அகற்றுவது கடினம். அவ்வாறு எத்தனையோ பிறவிகளில் தன்னை வந்து சேர்ந்த இருவினையாகிய பெரிய மரத்தை உயர்ந்த மலையில் இருந்து பாய்ந்து வந்த பெரும் வெள்ளம் வேரோடு சாய்ந்து விட்டது" என்று மாணிக்கவாசகர் சொல்கிறார். இதிலிருந்து தம்மைச் சூழ்ந்துள்ள வினை எப்படியானது என்று மக்கள் புரிந்து அவற்றை விலக்க வேண்டும் என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். சிவன்மீது வைக்கும் பற்றற்ற முழுமையான அன்பு காட்டாற்று வெள்ளம் போல வந்து மனத்தில் உள்ள

அழுக்குகளையெல்லாம் அகற்றும். அதனால் சிவனை முழுமனதுடன் தொழுங்கள். அந்த சிவவெள்ளத்தை எவ்வாறு மாணிக்கவாசகர் பாவித்தார்" என்றும் கூறகிறார்.

**88) உருவ அருள் நீர் ஓட்டா அருவரைச்**

**89) சத்தின் வான் சிறைகட்டி மட்டு அவிழ்**

**90) வெறி மலர்க்குளவாய் கோலி நிறை அகில்**

"சிவனடியார்களே, மலையில் இருந்து பெருகிவரும் திருவருள் கலந்த நீரை நன்றாக ஓடும்படி செய்தல் வேண்டும். அருமையான அந்த நீரைப் பெரிய அணைகட்டிக் குளமாக அமைத்தல் வேண்டும். அத்துடன் அக்குளநீரின் உதவியால் தேன்சிந்தும் நறுமணமுள்ள பூந்தோட்டத்தை உண்டாக்குதல் வேண்டும். இதுதான் எனது விருப்பமாகும். அதற்குச் சிவனே உனது அருள் வேண்டும்" என்கிறார். மனதில் பெருகும் திருவருளாகிய அந்த நீரை நல்லமுறையில் மனதில் தேக்கிப் பிறருக்குதவுதல், நல்ல சிந்தனைகளை உருவாக்குதல் வேண்டும். அதுபோல மலையில் இருந்து பாய்ந்து வரும் திருவருள் கலந்த நீரைத் தேக்குவதற்காகக் குளங்கள் அமைத்தல் வேண்டும். அக்குளத்தின் மூலம் நீரைப்பாய்ச்சி பூந்தோட்டங்களை உருவாக்க வேண்டும். பின் அப்பூக்களைப் பறித்துச் சிவனை ஆராதித்தல் வேண்டும். இவ்வாறு மாணிக்கவாசகர் சுவாமிகள் கூறுகிறார்" அத்துடன் இவ்வாறும் கூறகிறார்.

**91) மாப் புகைக்கரை சேர் வண்டு உடைக் குளத்தின்**

**92) மீக் கொள மேல்மேல் மகிழ்தலின் நோக்கி**

"சிவனடியார்களே, உயர்ந்த மலையில் இருந்து வந்த நீரைத் தேக்கிக் குளமாக அமைத்தபோது ஏராளமான மக்கள் அங்குவந்து குடியேறினர். அவர்கள் எரிக்கும் அகில் கட்டைகளின் நறுமணம் எங்கும் பரவி நறுமணதம்மைக் கொடுத்தது. குளத்தில் பூத்திருந்த தாமரை, அல்லி, நீலோற்பனம் ஆகிய மலர்களில் மொய்த்த வண்டுகளின் ஒலி இனிமையாக இருந்தது. அவை பார்ப்பதற்கு மிக்க அழகுடையனவாக இருந்தன. மோப்பதற்கு அவை நறுமணம் மிகுந்தனவாக இருந்தன. கேட்பதற்கு இனிமையானதாகவும் இருந்தன. அவை

யாவும் என்னை மகிழ்வடையச் செய்தன” என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். பூசலார் நாயனார் மனத்துள்க் கோவில் கட்டியதுபோல மாணிக்கவாசக சுவாமிகள் மனத்துக்குள் இவ் உலக நிர்மானத்தைக் காட்டுகிறார். அதன்பின் சிவவழிபாட்டைப் பற்றிச் சொல்கிறார்.

**93) அருச்சனை வயலுள் அன்பு வித்து இட்டு**

**94) தொண்ட உழவர் ஆரத் தந்த**

**95) அண்டத்து அரும் பெறல் மேகன் வாழ்க**

“சிவனடியார்களே, அன்பு தான் சிவம். ஒருவர் எந்தப் பொருளின் மீதும் அன்பு செலுத்தினால் அது சிவனைச் சென்றடையும் என்று உபநிடதம் கூறுகிறது. அதை மாணிக்கவாசகர் இவ்வாறு கூறுகிறார். “வழிபாடு என்னும் வயலிலே அன்பு என்னும் விதையை இடுங்கள். பரவெளியிலே பிரகாசிக்கின்ற பெரிய பொருளாகிய சிவபோகம் என்னும் அமிழ்தத்தை இறைவனின் தொண்டர்களாகிய சிவனடியார்கள் என்ற உழவர்கள் விளைவிப்பார்கள். அருட்பசியைப் போக்க அது நல்ல உணவாகும். சிவனின் அருள் அன்பாகும். அதனால் சிவன் அன்புமயமானவன் என்பர். சிவனின் அருளான அன்பைப் போற்றுங்கள். அன்பான ஓர் உலகத்தை உருவாக்குங்கள். எல்லா உயிர்கள் மீதும் அன்பு செலுத்துங்கள். இங்கு வருவோர் மனிதர்களிடத்தில் மாத்திரம் தான் அன்பு செலுத்த வேண்டும் என்று நினைக்கின்றனர். அதனால் போலும் தாம் வளர்க்கும் பெண் நாய் குட்டி ஈன்றால் தேவையில்லை என்று கருதும் நாய்க்குட்டியைத் தெருவில் விட்டுவிடுகின்றனர். அதைக் காகங்கள் கொத்தி உண்கின்றன. இந்த அவல நிலையைப் போக்க வேண்டும் என்பதற்காகக் கதிரேசன் தெருவில் விடப்படும் நாய்க்குட்டிகளைத் தூக்கிவந்து பராமரிக்கிறார். அடுத்த பிறப்பில் நீங்கள் நாயாகப் பிறந்தால் இந்த நிலை உங்களுக்கு ஏற்படும். அதனால் தயவுசெய்து உயிர்கள் மீது அன்பு செலுத்துங்கள். இதைத்தான் மாணிக்கவாசகர் விரும்புகிறார். அத்துடன் சிவனைப் பற்றியும் சொல்கிறார்”

**96) கடும்பணம் கச்சைக் கடவுள் வாழ்க**

**97) அருந்தவர்க்கு அருளும் ஆதி வாழ்க**

**98) அச்சம் தவிர்த்த சேவகன் வாழ்க**

**99) நிச்சலும் ஈர்த்து ஆட்கொள்வோன் வாழ்க**

**100) சூழ் இரும் துன்பம் துடைப்போன் வாழ்க**

**101) எய்தினார்க்கு ஆர் அமுது அளிப்போன் வாழ்க**

"சிவனடியார்களே, மாணிக்கவாசகர் சிவனைப் போற்றுகிறார்; "கருநிறப் படத்தோடு கூடிய பாம்பை இடுப்பில் கச்சையாகக் கட்டிய சிவபெருமான் வாழ்க. அரிய தவத்தைச் செய்கின்ற தவசிகளுக்கு அருள் புரிகின்ற முதல்வனே வாழ்க. மரணபயத்தைப் போக்குகின்ற வீரனே வாழ்க. எப்பொழுதும் அடியார்களைக் கவர்ந்திழுத்து ஆட்கொண்டருளும் ஈசனான சிவனே வாழ்க. எம்மை வளைத்துப் பிடித்திருக்கின்ற பெரிய வினையின் வேதனையை அகற்றும் சிவனே வாழ்க. தன்னை வந்தடைந்தவர்களுக்கு அரிய அருள் அமுதத்தை அள்ளி வழங்கும் வள்ளலே வாழ்க" என்று மாணிக்கவாசகர் சிவனது பெருமைகளை எடுத்துக் கூறுகிறார். தவம் செய்பவர்களுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்து இறுதியில் சிவன் தன்னோடு அவர்களைச் சேர்த்துக் கொள்வான். அதனால் அவர்களுக்குப் பிறவித் துன்பமில்லை. ஆசைகள் இல்லை. பற்றுக்கள் இல்லை. சிவனடியார்களுக்கு மரண பயம் கிடையாது. ஒரு சில மாதங்களுக்கு முன்பு நல்லைநாதனுக்குத் திடீரென்று மாரடைப்பு வந்தது. நெஞ்சில் பயங்கரமான வலி. வைத்தியர்கள் அவர் தப்ப மாட்டார் என்று சொன்னார்கள். அவரைப் பார்க்க நான் சென்றபோது நல்லைநாதன் சொன்னார்; "எனக்கு மிகவும் மகிழ்வாக இருக்கிறது. நான் சிவனை அடைய வேண்டும். சிவன் எந்நெஞ்சில் வீற்றிருக்கின்றான். அதனால் நான் பயப்படவில்லை. என்னப்பனான சிவன் என்னை வரச்சொன்னால் மகிழ்வுடன் சென்றுவிடுவேன். நான் யமனுக்குப் பயப்படவில்லை. அதுபோல எனது உறவுகளை நினைத்தும் கவலை கொள்ளவில்லை. படைத்த சிவன் அவர்களைக் காப்பாற்றுவான். நான் பிறந்தன்று எனது தந்தை இறந்தவர். என்னை அம்மாவும் பாட்டனும் வளர்க்கச் சிவன் உதவி செய்தவர். இவ்வுலகில் அனாதைகள் என்று யாரும் இல்லை. எல்லோருக்கும் தாயாகவும், தந்தையாகவும் சிவன் இருக்கும்போது பயம் எதற்கு" என்றார். இவ்வாறு தான் கதிரேசனும் சொல்வார். சிவனை வணங்குவோர் மரணத்திற்கு அஞ்சமாட்டார்கள். அத்துடன் தன் அடியவர்களுக்கு அன்பையும் துணிவையும் கொடுத்துத் தன்னோடு சேர்த்துக் கொள்ளும் தந்தையான

சிவனைப் போற்றுபவர்களுக்குத் துன்பங்கள் இன்பமாகும். எனக்கு எந்த வேதனையும் இல்லை. மார்பு வலிக்கிறதா என்று வைத்தியர் கேட்டார். இல்லை என்று சொன்னேன். இரத்த அழுத்தம் அதிகமாக உள்ளது கவனமாக இருங்கள் என்றார். என்னைச் சிவன் கவனமாகப் பார்க்கும்போது எனக்கு எப்படி மார்புவலி வரும். அவனின் நாமமான ஐந்தெழுத்தை ஓதினால் எல்லாத் துன்பமும் பறக்கும். நான் காலையில் சிவபுராணத்தை ஓதினேன். வலி வேதனை எதுவும் தெரியவில்லை. சிவன் துன்பங்களை மட்டுமல்ல வினைகளால் வரும் வேதனைகளையும் அகற்றுவான். எனக்கு வினைப்படி நோய் உண்டானது உண்மைதான். அதைச் சிவன் உடனேயே நீக்கிவிட்டான். அதனால் பயப்படாதீர்கள் என்று சொன்னவர். அது மட்டுமன்றி சிவனைப் பற்றியும் உமாதேவியாரைப்பற்றியும் சொன்னவர்”

**102) கூர் இருள் கூத்தொடு குனிப்போன் வாழ்க**

**103) பேர் அமைந்த தோளி காதலன் வாழ்க**

“சிவபெருமான் அன்புமயமானவர். அன்பு கொண்ட அடியவர்களுக்கு வேண்டிய வரங்களை அளிப்பவர். ஆனந்தக் கூத்தாடுபவர். அடர்ந்த இருளிலும் அவரால் ஆனந்தக் கூத்தாட முடியும். அப்படியான சிவன் அழகுமிக்க தோள்களை உடைய உமாதேவியாரைத் தனது இடப்பாகத்தில் வைத்துள்ளார். அவளின் பாகன் அவர்” இவ்வாறு மாணிக்கவாசகர் கூறுகிறார். அவருக்குப் பற்றுக்கள், பாசங்கள் இல்லை”.

**104) ஏதிலர்க்கு ஏதில் எம் இறைவன் வாழ்க**

**105) காதலர்க்கு எய்ப்பினில் வைப்பு வாழ்க**

“சிவனடியார்களே, சிவனைப் பற்றிக் கேட்க வேண்டுமானால் கதிரேசனைக் கேட்க வேண்டும். அவர் எப்போதும் பிறரின் துன்பங்களைப் போக்கு என்றே சிவனைக் கேட்பார். கதிரேசனின் வீட்டில் கூலி வேலை செய்பவன் சோதிலிங்கம். அவனுக்கு ஏழு பிள்ளைகள். அவன் கதிரேசனது வீட்டில் வேலை முடிந்ததும் வேறு வீடுகளுக்குச் சென்று வேலைகள் செய்வான். கதிரேசன் அவனுக்குப் பார்த்துப் பாராது உதவிகள் செய்வார். சோதிலிங்கம் நல்லவன். ஒழுக்கமானவன். ஆனால் கோவிலுக்குச் செல்ல

நேரமில்லாதவன். அவர் ஒரு நாள் சோதிலிங்கத்தை அழைத்துச் சொன்னார்; "சோதி, சிவனின் நாமத்தை உனது பெற்றோர் உனக்கு வைத்திருக்கின்றனர். நீ நல்லவன், ஒழுக்கமானவன் சிவபூசை செய். சிவபூசை செய்வது சிரமமானதல்ல. சிவனுக்கு ஒரு பூவை வைத்து 'நமசிவய' என்ற ஐந்தெழுத்தைச் சொல்லி வணங்கு. நீ வேலை செய்யும்போது சிவனை நினைத்து அவனது நாமத்தைச் சொல். சிவன் தன்னை வணங்காது பாராமுகமாக இருப்பவர்களுக்கும் தீங்கு செய்யாதவன். அவனை அன்போடு நேசிப்பவர்களுக்கு வறுமைக்காலத்தில் உதவும் என்று சேர்த்து வைத்த நிதி போன்று உதவுபவன். அவனை மாணிக்கவாசகர் தொழாது பாராமுகமாக இருப்பவர்களுக்கும் தீங்கு செய்யாத சிவனே வாழ்க என்றும், வறுமைக்காலத்தில் உதவும் சேமநிதி போன்று உதவுபனே வாழ்க என்றும் வாழ்த்துகிறார். நீ நேரங்கிடைக்கும் போதெல்லாம் அவனை வாழ்த்து என்றவர். சோதிலிங்கத்தின் மூத்தமகன் படித்துவிட்டுத் தகப்பனுடன் கூலி வேலை செய்தவன். சோதிலிங்கம் கதிரேசன் சொன்னபடி சிவனை வாழ்த்தத் தொடங்கியதும், அவனுக்குப் பெரியதொரு வேலை கிடைத்தது. அதனால் சோதிலிங்கத்தின் குடும்பம் வசதியாக வாழகிறது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**106) நச்சு அரவு ஆட்டிய நம்பன் போற்றி**

**107) பிச்சு எமை ஏற்றிய பெரியோன் போற்றி**

"மேலும் மாணிக்கவாசகர் இவ்வாறு சிவனைப் போற்றுகிறார். "நச்சுப்பாம்பை அடக்கி அணிந்துள்ள சிவனே போற்றி. எனது பக்தியை உணர்ந்து என்னைப் பிடித்துப் பித்தனாக்கிய பெரும் பொருளே போற்றி" என்கிறார். அரச சபையில் கௌரவமான மதிப்பு மிக்க மந்திரிப் பதவியில் இருந்த மாணிக்கவாசகரின் பக்தியை வெளிப்படுத்த எண்ணி அவரைப் பித்தனாக்கியவர் சிவன். அதனால் தான் மாணிக்கவாசகர் குதிரைகள் வாங்குவதற்காக அரசனால் கொடுக்கப்பட்ட திரவியங்கள் முழுவதையும் சிவனடியார்களுக்குச் செலவு செய்தார். அவருக்குச் சுய நினைவிருந்திருந்தால் அவர் பணத்தைச் செலவு செய்திருக்கமாட்டார். குதிரைகளை வாங்கி வந்து அரசனுக்குக் கொடுத்து விட்டு அரச சுகபோக வாழ்வை அனுபவித்திருப்பார். அவர் பித்தனாக இருந்தமையால் தான் அவ்வாறு நடந்ததாக கூறுகிறார்.

ஒருவன் பித்தனாக இருக்கிறானென்று பிறர் தான் கண்டு சொல்வார்கள். ஆனால் மாணிக்கவாசகர் சிவன் தன்னைப் பித்தனாக்கி அடிமை கொண்டார் என்று சொல்கிறார். அதற்கு நன்றியும் சொல்கிறார். இது வியப்புக்குரியது மட்டுமல்ல சிவனது திருவிளையாடலுமாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**108) நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி நால்திசை**

**109) நடப்பன நாடா அய்க் கிடப்பன கிடா அய்**

மேலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார் "மாணிக்கவாசக சுவாமிகள் சாதாரணமான வாக்கியங்களால் சிவனைப் போற்றுகிறார். திருநீறு பூசப் பெற்றவனாய்க் காட்சி கொடுக்கும் வல்லவனே போற்றி. நான்கு திசைகளிலும் நடமாடுபவைகளை நடமாடச் செய்பவா போற்றி. அசையாது கிடப்பவைகளை அந்.நிலையில் வைத்திருக்கும் ஈசனே போற்றி" என்று சிவனை வாழ்த்துகிறார். அசைபவற்றை அசைப்பவன் சிவன். அசையாதவற்றை அசையாது வைத்திருப்பவனும் சிவன். இவற்றை உணர்ந்தவர்கள் சிவனை உணர்ந்தவர்களாவர். அது நடக்கச் சிவன் உதவுவார். உதாரணமாக மரங்கள் என்றால் அசையும். ஆனால் அவற்றால் நடமாட முடியாது. அதை அவ்வாறு வைத்திருப்பவன் சிவன். அவை அசைந்து சென்றால் எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்க்கவே முடியாது. அதனால் அவற்றுக்கு வேண்டிய உணவையும் நீரையும் அவன் அவை இருக்குமிடத்திலேயே கொடுக்கிறான். பறவைகள் பறந்து எங்கும் திரியக்கூடியன. அவை அசையாது இருந்தால் எப்படி இருக்கும். அதையும் நினைத்துப் பார்க்கவே முடியாது. அதனால்தான் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்த மாணிக்கவாசகர் அவ்வாறு சிவனைப் போற்றுகிறார். இதை வேறெவரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**110) நிற்பன நிறீ இச்**

**111) சொல்பதம் கடந்த தொல்லோன்**

**112) உள்ளத்து உணர்ச்சியில் கொள்ளவும் படா அன்**

**113) கண் முதல் புலனால் காட்சியும் இல்லோன்**

“சிவனடியார்களே, பழம் பொருளான சிவன் நிற்கின்றவற்றைச் நிற்கச் செய்கிறான். அவனது பெருமைகளைச் சொல்லில் அடக்க முடியாது. அவன் மனதிற்கும் புத்திக்கும் எட்டாதவன். புறக் காரணங்களாகிய கண், காது முதலியவற்றாலும் அவனை அறியவோ கேட்டுத் தெரியவோ முடியாது. அப்படியானவனை எப்படி அறிவது என்று நினைப்பீர்கள். அதற்கு ஞானக் கண்ணைப் பெறுதல் வேண்டும். ஞானக்கண்களைப் பெற்றவர்கள் தான் சிவனைக் காண்பார்கள். ஞானக்கண் என்பது பக்தியின் முதிர்ச்சி. தூய்மையான அன்பைச் சிவன் மீது வைப்பவர்களுக்கே ஞானக்கண் கிடைக்கும். அக்கண்ணால் சிவனைக் காண்பவர்கள், அவனது திருவடியை அடைந்து அவனோடு இருப்பர். சிவனின் மீது பற்றுக் கொண்ட நல்லைநாதனும் கதிரேசனும் ஞானக்கண் பெற்றவர்கள் என எண்ணத் தோன்றுகிறது. ஞானக்கண்களின் மூலம் அவர்களுக்கு எதிர்காலம் தெரியும். ஒருமுறை வெளிநாட்டில் இருந்து இங்கு வந்த பாஸ்கரன் என்பவன் கதிரேசனைச் சந்தித்து மறுநாள் தான் புறப்படப் போவதாகக் கூறினான். உடனே கதிரேசன்; “இன்று போகாதே. நாளைக்குப் போ” என்றார். அவன் அதைப் பெரிதாக எண்ணவில்லை. அவன் தனது நண்பனான காண்டீபனுக்கு அதைச் சொன்னபோது அவன் சொன்னார்; “வயது போனவர்கள் எதற்கும் நாள்ப் பார்ப்பார்கள். இதனால்தான் எமது ஊர் பின்தங்கியுள்ளது. நீ போ. உனக்கு விடுமுறை முடிந்து விட்டது என்று சொன்னாய். வெளிநாட்டில் குறித்த நாளில் வேலைக்குச் செல்லாவிட்டால் வேலையால் நீக்கி விடுவார்கள். இது அந்தக் கிழடுகளுக்குத் தெரியாது” என்றவன். அன்று பாஸ்கரன் சென்ற வாகனம் மரத்தோடு மோதி விபத்துக்குள்ளானதால் அவன் ஒரு வாரத்தின் பின்பே சென்றான். நடராசா வீட்டுக்கு நிலையம் எடுத்து தரும்படி கதிரேசனைக் கேட்டவர். அவர் இரண்டு நாட்கள் கழியட்டும் என்றவர். அதை நம்பாது நடராசா இன்னொருவனைக் கொண்டு நிலையம் எடுத்தவர். ஐந்து வருடங்களாகியும் வீடு பூரணப்படுத்தப்படவில்லை. ஞானக்கண் என்றதும் சிவபெருமானைப் போல நெற்றியிலோ அல்லது உடலின் வேறு பகுதியிலோ வந்தமைவதில்லை. அது மனதுக்குள்ளே தோன்றும். அதைப் புத்தியால் உணரலாமே தவிர காண முடியாது. காண முடியாத பல பொருட்கள் இருப்பதாக நாம் நம்புகிறோம். அணு, காற்று, வெப்பம், நறுமணம் எனப் பல உண்டு. இவற்றை உணருதல் வேண்டும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**114) விண்முதல் பூதம் வெளிப்பட வகுத்தேன்**

**115) பூவில் நாற்றம் போன்று உயர்ந்து எங்கும்**

**116) ஒழிவு அது நிறைந்து மேவிய பெருமை**

“சிவனடியார்களே, தன்னை ஞானக்கண்ணுக்குக் காட்டும் சிவன், ஆகாயம் முதலான ஐம்பூதங்களையும் மனிதனின் கண்களுக்குத் தெரியும் வண்ணம் படைத்துள்ளான். காற்றை உணர்ந்து கொள்ளல் வேண்டும். ஏனையவை மனிதனின் அன்றாடத் தேவைகளாகும். நிலத்தில் இருந்தே மனிதன் எல்லாவற்றையும் பெறுகிறான். அதைக் காணாவிட்டால் எப்படி அதன் பயனை அனுபவிக்க முடியும். நீரும் அது போன்றது. தேவை எப்படியானதோ இறைவனின் படைப்பும் அப்படி இருக்கும். தேவையில்லாதன எவையும் இறைவனால் படைக்கப்படுவதில்லை. இன்று உதவாத ஒன்று என்றும் உதவாததாக இருக்க மாட்டாது. இறைவன் மலரில் மணம் போல இருந்து தனது தோற்றங்களைப் பிரபஞ்சமெங்கும் நீக்கமற நிறைத்து வைத்துள்ளான். மலரில் உள்ள மணத்தைக் காணமுடியாது. உணர முடியும். அதுபோலச் சிவனின் தோற்றங்களை உணரமுடியுமேயன்றிக் காணமுடியாது. பக்தியால் இறைவனை அடைய முடியும். பக்தியுள்ளவன் இறைவனது தோற்றங்களை ஞானக்கண்ணால் கண்டு கொள்வான். எத்தனையோ சிவனடியார்களுக்குச் சிவன் காட்சி கொடுத்தவர். அதுவும் அவரவர் விரும்பிய தோற்றத்தில் காட்சி கொடுத்தவர். இதைச் சொன்னால் நம்பமாட்டார்கள். நம்புபவர்கள் சிவனின் அருகே இருப்பார்கள். பிரபஞ்சமெங்கும் மலரில் மணம் போல வியாபித்திருக்கும் சிவன் அடியவர்களின் பக்திக்கு அகப்படுவான். மீனைப் பிடிப்பதற்குத் தூண்டியில் உணவு வைப்பது போலச் சிவனைப் பிடிப்பதற்கு மாசற்ற அன்பை மனதில் உருவாக்க வேண்டும். மூக்கில் கோளாறு உள்ளவனுக்கு மலரின் மணம் தெரியாது. அதுபோல அன்பில்லாதவனின் உள்ளத்திற்கு இறைவனின் உருவம் தெரியாது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**117) இன்று எனக்கு எளி வந்து அருளி**

**118) அழி தரும் ஆக்கை ஒழியச் செய்த ஒண்பொருள்**

“சிவனடியார்களே, அன்புள்ளவனிடம் வலியச் சென்று சிவன் அருள் புரிவார். அது பக்தி முற்றிய நிலை. அந்நிலையில் சிவனைத் தவிர வேறெதுவும் தெரியாது. உடலும் உலகப் பொருட்களும் அழிந்துவிடும் என்ற உணர்வு உண்டானால் பரம்பொருளான சிவனைக் காண முடியும் என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். அந்த இரண்டையும் செய்பவன் சிவன். நீங்கள் யாரவது சென்று கதிரேசனுடன் கதைத்துப் பாருங்கள். அவருக்குக் காலை என்ன உண்டேன் என்று தெரியாது. பல நாட்கள் உண்ணாமல் இருந்தாலும் அது அவருக்குத் தெரியாது. அது பரவசநிலை உடலைப் பற்றிய நினைவு இல்லாத நிலை. இது வயது வந்ததால் வந்த முதுமையின் செயல் அல்ல. நீங்கள் சென்று இந்த ஆச்சிரமத்தைப் பற்றி, ஊர்ச் சிவன்கோவிலைப் பற்றி, சிவனின் பெருமைகளைப் பற்றிக் கேளுங்கள். பலவற்றையும் விபரமாகக் கூறுவார். அதில் அவருக்கு அக்கறை உண்டு. தனது உடலிலும் தனது சொத்துக்களிலும் அவருக்குப் பற்று இல்லை. இறந்தால் உடலில் கட்டியிருக்கும் அரைஞாண் கயிற்றையும் அறுத்து விடுவார்கள். ஏனென்றால் அதுவும் அவருடன் கூடச் செல்லாது. சிவனும் அவனது பெருமைகளும் அவளனது அருளும் தான் கூட வரும். அதனால் அவற்றைத் தவிர வேறெதையும் நினைப்பதில்லை என்பார். அதை எனது நலன் கருதிச் சிவனே அறுத்தவன் என்றும் கூறுவார். இந்தநிலை ஏற்பட்டால் தான் அது உருவாகும் என்பார் கதிரேசன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**119) இன்று எனக்கு எளி வந்து இருந்தனன் போற்றி**

**120) அளி தரும் ஆக்கை செய்தோன் போற்றி**

“சிவனடியார்களே, மாணிக்கவாசகர் சொல்கிறார், “இன்று எனக்கென்று எளிதில் பிரசன்னமாகியிருப்பவனே போற்றி. எனது பக்தியைப் பெருக்குவதற்காக அருள் உடம்பை எனக்காக அமைத்துக் கொடுத்த உன்னை வணங்குகிறேன்” என்கிறார். சிவனது நோக்கம் உயிர்கள் யாவும் இம்மையிலும் மறுமையிலும் இன்பமாக இருக்கவேண்டும் என்பதே சிவனின் விருப்பம். பூமியில் வாழும் மனிதர்கள் இன்பமாக வாழவேண்டும் என்பதற்காகத்தான் உலகையும் உலகில் உள்ள பொருட்களையும் சிவன் படைத்தான். பசுவைப் படைத்து மனிதனின் மறு தாயாக மாறுதல் செய்து அவன் இறக்கும்வரை பால் கொடுக்கச் செய்தான். அதை உணராத மனிதர்கள் இன்று பசுவைக் கொன்று அதன் இறைச்சியை உண்கிறார்கள். முறைப்படி வாழும் மனிதர் முன் சிவன் பிரசன்னமாவான் என்பதற்கு மாணிக்கவாசகரின் இக்கூற்று உதாரணமாகிறது.

அத்துடன் ஒருவன் பக்தியைப் பெருக்க அருள் உடம்பையும் அமைத்துக் கொடுத்துள்ளான். மனம் தூய்மையாக இருந்தால் உடலும் தூய்மையாக இருக்கும். அதனால் சிவநினைவை மனதில் உருவாக்கினால் அவ்வுடம்பு அருள் உடம்பாக மாறும். அருளுடம்பு உண்டானால் மனதில் பற்றுக்கள் உண்டாகமாட்டா. உடலின் மீதுள்ள பற்று முற்றாக அற்றுவிடும். இதனால் உலக நினைப்பு உண்டாகாது. சிவனின் நினைவே உண்டாகும். அப்படி உண்டானால் இனித்த மண்ணுலக வாழ்வு கசக்கும். விண்ணுலக வாழ்வு இனிக்கும். அந்த இனிப்பு ஒருபோதும் நீங்காது. உயிர் சிவனோடு சேர்ந்திருக்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**121) ஊற்று இருந்து உள்ளம் களிப்போன் போற்றி**

**122) ஆற்றா இன்பம் அலர்ந்து அலை செய்யப்**

**123) போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்**

"சிவனடியார்களே, மாணிக்கவாசகர் சிவனோடு ஏற்பட்ட அனுபவத்தை இவ்வாறு கூறுகிறார், "அன்புமயமான சிவன் என் உள்ளத்தில் அன்பைப் பெருகச் செய்து ஆனந்தத்தைப் பெருக்குகிறான். அப்படியானவனை நான் வணங்குகிறேன். அவனருளால் பேரின்பம் பெருகி வந்து என்னைச் சூழ்ந்தபோது அதை ஏற்க முடியாதபடி இயங்கும் ஊனாலான உடம்பை நான் வெறுத்து ஒதுக்குகிறேன்" என்கிறார். மனம் பக்குவப்பட்டுச் சிவ நினைவாகி சிவனோடு கலக்க விரும்பும்போது இந்த உடல் அதற்குத் தடையாக இருக்கிறது. வினைப்படி உடல் அழிந்தால் தான் உயிர் பேரின்பத்தைச் சிவனின் மூலம் அடைய முடியும். இவ்வளவு காலமும் பேணிப் பாதுகாத்த உடல் மீது மாணிக்கவாசகருக்கு வெறுப்பு உண்டாகிறது. தான் சிவனோடு கலக்க இந்த உடல் விடுகிறதில்லை என்ற நினைப்பு அவரை வாட்டுகிறது. இந்தநிலை சிவன் மீது கொண்ட அன்பின் மிகுதியாலும் வரும். வெறுப்பாலும் வரும். எனது பேரனார் அறுபது வயதில் பாரிசவாத நோயால் பீடிக்கப்பட்டார். ஒரு கையும் ஒரு காலும் வழங்காததால் அவர் எதற்கும் இன்னொருவரின் உதவியையே நாடவேண்டிய நிலை. அதனால் வெறுப்படைந்த அவர் இந்த உடலை விட்டு உயிர் போகுதில்லையே என்று தினமும் கவலைப்படுவார். உடம்பின் மீது இரண்டு வகையில் வெறுப்பு வரும். சிவ பக்தர்கள் சிவனோடு கலக்க உடம்பு விடுகிறதில்லை என்று கவலைப்படத் தீராத நோயாளிகள் துன்பம்

தாங்கமுடியாது தமது உடலை வெறுப்பர். இரண்டும் சிவனது செயல்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**124) மரகதம் குவா அல்மாமணிப் பிறக்கம்**

**125) மின் ஒளி கொண்ட பொன் ஒளி திகழத்**

**126) திசை முகன் சென்று தேடினார்க்கு ஒளித்தும்**

“சிவனடியார்களே, சிவபெருமானின் உருவகத்தின் நிறம் பற்றி மாணிக்கவாசகர் இவ்வாறு கூறுகிறார். “பச்சை மணிக்குவியல், சிவப்பு மணிக்குவியல் ஆகியவற்றின் பிரகாசமும் மின்னலின் ஒளியும் ஒன்று சேர்ந்து திகழ்கின்ற தெய்வமே, புறநாட்டங் கொண்டு உன்னைத் தேடுபவர்களுக்கு நீ தென்படாது ஒளித்திருக்கிறாய்” என்கிறார். ஒரு குடம் பாலில் ஒரு சிறு உப்பைக் கலந்தாலும் அது கெட்டுவிடும். அதைப் போன்றது தான் மனதும். மனம் சிறியது என்று நினைக்காதீர்கள். அது அண்டங்கள் எல்லாவற்றிலும் பெரியது. ஒரு கணத்தில் உலகம் முழுவதையும் சுற்றி வந்துவிடும் சக்தி வாய்ந்தது. அதற்குச் சிறு ஆசை வந்தால் போதும். அது மலையாக வளர்ந்து விடும். அதன் பின் அதை நிறைவேற்றாது தூங்காது. வேலைகள் எதுவும் செய்யாது. எந்த ஒரு செயலைச் செய்வதனாலும் அந்தச் செயலைத்தவிர வேறு எதை நினைத்தாலும் அது செயலில் ஈடுபட விடாது. குணபாலன் நல்ல மேஸ்திரி. மிகவும் நுட்பமாகக் கட்டிடங்களைக் கட்டுவான். அதனால் அவனைக் கொண்டு கட்டிடம் கட்டப் பலரும் விரும்புவர். பகல் ஒரு மணியானால் குடிக்கச் சென்று விடுவான். மறுநாள் தான் வேலைக்கு வருவான். அதனால் இப்போ அவனைக் கொண்டு கட்டிடம் கட்ட யாரும் விரும்புவதில்லை. எமது ஆச்சிரமத்திற்கு வரும் தில்லைநடராசா என்ற பிறவூரில் வாழும் வர்த்தகர் சிவனை வணங்குவார். தான தர்மம் செய்வார். ஆச்சிரமத்திற்கு வருவார். வந்து மனநிம்மதியில்லாமல் இருக்கிறது. குழப்பமாக இருக்கிறது. வாழ்க்கை வெறுக்கிறது என்பார். அவரைப் பற்றி விசாரித்தபோது அவருக்கு இரு மனைவிமார். அவர்கள் இருவரும் ஓயாமல் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அதனால் அவரால் நிம்மதியாகச் சிவனை வணங்க முடியவில்லை. தெளிந்த சுத்தமான மனதுடன் சிவனை வணங்க வேண்டும். புற நாட்டமிருந்தால் மனம் பிரார்த்தனையில் ஈடுபடாது. அதனால் புறநாட்டமில்லாது வணங்குங்கள். அப்படி வணங்கினால் தான் சிவன் தென்படுவான். மனதுக்குள் இருக்கும் சிவன்

புறநாட்டம் கொண்டவர்களுக்கு ஒளித்து விடுவான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**127) முறையுளி ஒற்றி முயன்றவர்க்கு ஒளித்தும்**

“சிவனடியார்களே, சிவன் இரக்கமுள்ளவன். அன்பானவன். தன் மீது அன்பு செலுத்தும் அடியவர்களை நேசிப்பவன். நூல்களில் சொல்லி வைத்துள்ள நன்னெறிகளை ஒழுங்காகப் பின்பற்றுபவர்களுக்கும் காட்சி கொடுக்காதவன். நல்லொழுக்கம் இல்லாதவர்களின் வாழ்க்கை இன்பமாக இருக்கிறது என்று தீயவர்கள் சொன்னாலும் அவர்கள் வெளிவேடம் போடுகிறார்கள் என்று பலருக்கும் தெரியும். ஏனென்னறால் நல்லொழுக்கம் மிகுந்த சமய வாழ்வு வாழும் எல்லோருக்கும் சிவன் காட்சி கொடுக்க மாட்டான். அதற்கும் அவனின் அருள் வேண்டும். நான் சதா அவனது நினைவாகவே இருக்கிறேன். சிவபூசை செய்கிறேன். ஆனால் எனக்கு அவன் இதுவரை காட்சி தரவில்லை. ஆச்சிரமத்திற்கு வரும் சிலர் சிவன் தமக்குக் காட்சி தருவதாகக் கூறுகின்றனர். அதை அவர்களின் செயல்களில் இருந்து நம்ப வேண்டியுள்ளது. கதிரேசன் சொன்னது நடக்கும். சென்ற வாரம் ஒரு பெண்ணுக்குப் பிரவச வேதனை வந்தபோது வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். வைத்தியர்கள் உடனே சத்திரசிகிச்சை செய்யாவிட்டால் பெண்ணின் உயிருக்கு ஆபத்து என்றனர். பெண்ணின் கணவன் கதிரேசனிடம் வந்து அதைச் சொல்லி அழுதான். அழாதை வைத்தியசாலைக்குப் போ அழகான பெண் குழந்தை ஒன்று பிறந்திருக்கும் என்றவர். அவன் வைத்தியசாலைக்கு சென்றபோது பெண் குழந்தை ஒன்று பிறந்திருந்தது. இப்படி பலவற்றை அவர் கூறியுள்ளார். கூறியவை எல்லாம் நடைபெற்றன. இது புதினம் அல்ல. சிவன் காட்சி தர அவனின் அருள் வேண்டும். ஞானசம்பந்தருக்கு மூன்று வயதில் காட்சி கொடுத்த சிவன், திருநாவுக்கரசருக்குக் காட்சி கொடுக்கப் பல ஆண்டுகள் சென்றன. இது அவரவரது புண்ணிய பேறாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**128) ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்து**

**129) உற்றவர் வருந்த உறைப்பவர்க்கு ஒளித்தும்**

“சிவனடியார்களே, சிவனைச் சாதாரணமாக வணங்கவேண்டும். அவன் எனக்குக் காட்சி தரல் வேண்டும் என்று நினைப்பதும் ஆசையே. எந்த

எண்ணமும் இல்லாமல் வணங்கினால் தான் அவனது அருள் கிடைக்கும். அவனும் காட்சி தருவான். இறைவனுக்கு உங்களுக்கு என்ன தரவேனண்டும் என்று தெரியும். அதைத் தருவான். அதனால் எதையும் கேட்கக்கூடாது. கேட்கக்கூடாதவற்றைக் கேட்டுவிட்டு இறைவன் அதைத் தரவில்லை என்று குறைப்படுவதும் கூடாது. கொடிய தவம் செய்தால் சிவனைக் கண்டு அவனிடம் பெரும் வரங்களைப் பெறலாமென நினைத்த பல அசுரர்கள் வெட்ட வெளியில் தன்னைச் சுற்றித் தீ மூட்டி விட்டு அதன் நடுவே இருந்து தவம் செய்தனர். அதைக் கண்டு அந்த அசுரனின் உற்றார் உறவினர்கள் பெருந்துன்பப்பட்டனர். அப்படித் தவம் செய்த அசுரர்களுக்குக் கூட அவன் காட்சி கொடுக்கவில்லை. ஒரு பூவைச் சிவலிங்கத்தின் மேல் வைத்து ஐந்தெழுத்தை அன்புடன் ஓதி வந்தவர்களுக்குச் சிவன் காட்சி கொடுத்த வரலாற்றை நாம் புராணங்களில் காண்கிறோம். கதிரேசன் சிவபூசை செய்வார். எந்நேரமும் சிவனையே நினைத்திருப்பார். அவர் உணவு உண்ணவில்லை என்று குடும்பத்தினர் ஒருபோதும் கவலை கொள்ளவில்லை. அவர் உணவை அல்ல எதனையும் ஒறுத்ததில்லை. அவர் சொன்னது நடக்கும். அவர் ஒரு போதும் சிவன் தனக்குக் காட்சி தந்ததாகச் சொன்னதில்லை. "நான் கலக்கத்துடன் வாழும் சிவனடியார்களுக்கு அக்கலக்கத்தை நீக்குவதற்குகாக ஆறுதல் வார்த்தைகள் கூறுகிறனே தவிர அவர்களது எதிர் காலத்தைப் பற்றிக்கூறவில்லை. அன்று கதிர்காமநாதன் மிகுந்த கலக்கத்துடன் வந்தான். தனது மனைவி இறந்து விடுவாளோ எனப் பயந்தான். அவனுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறவிட்டுச் சிவனைப் பிரார்த்தித்தேன். சிவனைத் தினமும் நான் பிரார்த்திப்பேனே தவிர வேறு எதுவும் நான் செய்யவில்லை. அவரவர் வினைப்படி தான் வாழ்க்கை நடைபெறும். அதை என்னால் மாற்ற முடியுமா? ஒரு திருமண வைபவத்திற்குச் செல்வோர் மணமக்களை வாழ்த்துவது போன்றது எனது செயல். தீயவற்றை நினைக்கவும் கூடாது. தீதானாலும் நல்லதைச் சொல்ல வேண்டும் என்பார்". இது அவரது பண்பு என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**130) மறைத்திறம் நோக்கி வருந்தினருக்கு ஒளித்தும்**

**131) இத் தந்திரத்தில் காண்டும் என்று இருந்தோர்க்கு**

**132) அத் தந்திரத்தில் அவ்வயின் ஒளித்தும்**

“சிவனடியார்களே, சாத்திர ஞானத்தை முறையாகப் பின்பற்றுவதன் மூலம் இறைவனை அடையலாம் என்று நினைப்பதுவும் நடக்காது. சில பெரியவர்கள் நீற்றை எவ்வாறு அணிய வேண்டும். எவ்வாறு குளித்தல் வேண்டும். எவ்வாறு இறைவனை வணங்க வேண்டும் என்றெல்லாம் எழுதியுள்ளனர். பூசை முறைகளைப் பற்றியும் வேள்வி செய்யும் முறைகளைப் பற்றியும் எழுதியுள்ளனர். நாகராசா என்ற சிவபக்தர் ஒரு நூலில் கூறியபடி பூந்தோட்டம் அமைத்து, அந்நூலில் கூறியபடி பூக்களைப் பறித்து மாலை கட்டிக் கோவில் குருக்களிடம் கொடுக்கும்போது அது எவ்வாறு போடப்படல் வேண்டும் என்றும் கூறிக் கொடுப்பார். குருக்கள் மாலை போட்டது பிழையென்று வாதிடுவார். தான் பூப்பறித்த முறை சரியா என்று தான் படித்த நூலை எடுத்துப் படித்துப் பார்ப்பார். அதிலேயே அவரது நோக்கம் இருக்கும். பிழையாகச் செய்து விட்டால் வருந்துவார். அவரது நண்பரான காசிநாதன் சொல்வான் நீ திருமந்திரத்தைப் படித்துப் பார். அதில் எந்தவிதிமுறைகளும் கூறப்படவில்லை. அன்புடன் சிவனை வணங்கு என்று தான் கூறப்பட்டுள்ளது. எமது நாயன்மார்களில் முக்கியமானவரான கண்ணப்பர் எவ்வாறு வணங்கினார். சிவன் சுத்தமான மனத்தைத்தான் விரும்புவான். விதிமுறைகளை அல்ல என்பார். அதை நாகராசா கேட்கமாட்டார். சிவனை வணங்கிவிட்டு எதையும் செய்தல் வேண்டும். நான் பட்டணத்திற்குச் சென்ற இடத்தில் ஒரு முக்கியமான பிரமுகரைச் சந்தித்தேன். அவரோடு ஒரு வேலை விடயமாக ஒப்பந்தம் செய்ய வேண்டியிருந்தது. அப்போது முறைப்படி சிவனை வணங்க முடியுமா நின்ற இடத்தில் நின்று மனதால் பூ போட்டுத் தீபமேற்றி வணங்கிவிட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டேன். எனது வேலை பூரணமாக முடிந்தது என்ற போதும் நாகராசா நம்பவில்லை. இந்த உபாயத்தால் இறைவனைக் கண்டுவிடலாம் என்று நினைத்து வணங்குபவர்களுக்குச் சிவன் அந்த உபாயத்திலேயே மறைந்திருந்து காட்சி கொடுக்கமாட்டான். விதிமுறைகள் ஒரு ஒழுங்கமைப்புக்காக கூறப்பட்டனவே தவிர அவை சிவனது விருப்பமல்ல. ஒருவன் மனத் தூய்மையுடன் எதை நினைக்கிறானோ அது தான் விதி. பூசலார் மனதுக்குள் கோவில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்தவர். மன்னன் கருங்கற்களால் பெரும் கோபுரம் அமைத்துக் கோவில் கட்டியவன். அவனிடம் தான் மன்னன் என்றும் அதிகாரம் உள்ளவன் என்ற எண்ணம் இருந்ததால் சிவன் அக்கோவிலில் மறைந்திருந்து காட்சிக்கு எட்டாதவனாகி விட்டான். பூசலார் தான் சிவனின் அடிமை என்று நினைத்தால் சிவன் அவருக்குக் காட்சி கொடுத்தான். இதைப் புரிந்து கொள்ளுங்கள். வந்தி என்ற பெண்ணின் மாறாத

பக்தியை விரும்பிச் சிவன் பிட்டு வாங்கியுண்டு மன்னனிடம் அடியும் வாங்கியவன். இவற்றைப் படித்தும் பலர் அவற்றை நினைக்கிறார்களில்லை'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**133) முனிவுஅற நோக்கி நனிவரக் கௌவி**

**134) ஆண் எனத் தோன்றி அலி எனப் பெயர்ந்து**

**135) வாள்நுதல் பெண் என ஒளித்தும் சோண்வயின்**

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அன்று உரையாற்றிக் கொண்டிருந்தபோது சிவனடியார் ஒருவர் கேட்டார்; "சுவாமி சிவனின் உருவத் தோற்றத்தைப்பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகச் சொல்கின்றனர். அதைக் கேட்டால் சிவனின் மீது எனக்கு நம்பிக்கை வருவதில்லை. சிவனின் உண்மையான தோற்றம் எது"?

"மகனே; தேவையில்லாத கற்பனைகளில் ஈடுபடாதே. ஒரு தாய் அன்பு மிகுதியால் தனது மகனைக் கற்கண்டு என்பாள், பச்சைக்கிளி என்பாள், மரகதம் என்பாள், தங்கம் என்பாள், செல்லக்குட்டி என்பாள். இது அளவற்ற அன்பால் அழைக்கும் நிலை. எனது தந்தைக்கு வைத்திலிங்கம் என்று பெயர் வைத்த பெற்றோர் தம்பையா என்றும் அழைத்தனர். பின் தம்பையாதான் வழக்கில் இருந்து வருகிறது. வைத்திலிங்கம் என்றால் யாரென்று பலருக்குத் தெரியாது. இப்படிப் பலர் இருக்கிறார்கள். அதுபோலத்தான் சிவன் தாய்க்குப் பிள்ளை, தங்கம், மரகதம் என்பது போலத் தந்தையான சிவனைச் சிலர் ஆண் என்பர். சிலர் பெண் என்பர். சிலர் ஆணும் பெண்ணும் சேர்ந்தவர் என்பர். சிலர் அலி என்பர். சிலர் உருவமில்லாதவன் என்பர். இது அவரவரின் பார்வையைப் பொறுத்தது. இது நூல்களில் உள்ளவற்றை நம்புவதால் உண்டாவது. இறைவனை நீ எந்த உருவில் பார்க்க விரும்புகின்றாயோ அவர் அந்த உருவில் உனக்குக் காட்சியளிப்பார். எனது தந்தை நான் சிறுவயதில் இருக்கும்போதே இறந்து விட்டார். என்னை வளர்த்து ஆளாக்கியது எனது தாயாரின் தந்தை. அவரைத்தான் நான் சிவனென நினைக்கிறேன். நான் சிவனை வணங்கும்போது அவரின் முகம்தான் தெரிகிறது. இது அவரவரது மனப் பிரேமை. ஓர் இலக்கை வைத்துத் தான் செயலைத் தொடங்க வேண்டும். அப்போதுதான் அச் செயல் வெற்றியைத் தரும். அது போல இறைவனை வணங்கும்போது ஒரு உருவத்தை உருவகித்து வணங்கினால்தான் அந்த

வழிபாடு சிறப்பாக அமையும். அதனால்தான் ஞானிகள் இறைவனுக்கு உருவத்தை அமைத்துள்ளனர். இறைவன் உருவமில்லாதவன் என்றால் பக்தர்களுக்கு நம்பிக்கை உண்டாக மாட்டாது. அதற்காகத்தான் உருவ வழிபாடு உருவாக்கப்பட்டது. வணங்கத் தொடங்கியவன் மனம் பக்குவம் அடைந்த பின்பு உருவத்தைப் பற்றிச் சிந்திக்க மாட்டான். உருவம் ஒரு குறிக்கோளை உண்டாக்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**136) ஐம்புலன் செலவிடுத்து அருவரை தொறும் போய்த்**

**137) துற்றவை துறந்த வெற்று உயிர் ஆக்கை**

**138) அரும் தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும்**

மேலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்; "சிவன் ஆணுமல்ல, பெண்ணுமல்ல, அலியுமல்ல. அவர் எந்தச் சரீரத்தை எடுக்கிறாரோ, அந்தச் சரீரமாகவே அவர் மிளிர்கிறார். அதனால் அவரது உருவத்தைப்பற்றி ஆராயாதீர்கள். ஒரு ஆணுக்குப் பெண்ணைத் திருமணம் பேசும்போது அவர்களது நிழற்படங்கள் கொடுக்கப்படுகின்றன. ஆண் பெண்ணின் படத்தைப் பார்த்து ரசித்துப் பின் அவளை விரும்புவான். தொடர்ந்து பார்த்தால் அழகில்லாதவையும் அழகாகத் தோன்றும். அன்பு உண்டாகும். இதுபோலத்தான் சிவனின் உருவும். பல தவசிகள் ஐம்பொறிகளைத் தூர ஒதுக்கி வைத்துவிட்டு காட்டுக்குச் சென்று அங்குள்ள மலையில் ஏறி, உணவை அறவே துறந்து அருந்தவம் செய்கின்றனர். அவர்களுடைய அறிவுக்கும் எட்டாதவன் சிவன். வீட்டில் இருந்து தனது கடமைகளை ஒழுங்காகச் செய்து சிவனடியார்களைப் பேணிச் சிவனை வழிபடுபவர்களே சிறந்தவர்கள். அவர்கள் குடும்பத்தினருடன் இருந்து சிவசேவை செய்கின்றனர். நாகநாதன் என்றொருவன் திருமணமாகிக் குழந்தைகளைப் பெற்றபின் தனக்குச் சிவநினைவு வந்துவிட்டதெனக்கூறிக் காட்டுக்குச் சென்று தவஞ் செய்தான். அவனுக்குச் சிவன் காட்சி கொடுக்கவில்லை. ஊரிலிருந்து சிவனடியார்களையும், அனாதைகளையும் பராமரித்த சிவநாதன் என்ற பெரியவருக்குச் சிவன் காட்சி கொடுத்தான். சிவசேவை என்பது அன்பைக் கொடுத்தல், அறிவைக் கொடுத்தல், உணவைக் கொடுத்தல், பாதுகாப்பைக் கொடுத்தல். நாகநாதனின் மனைவி பிள்ளைகளை வளர்க்கப் பெருந் துன்பப்பட்டாள். அவளது பிள்ளைகளைப் பராமரித்தது சிவநாதன். அவர் சிவனை வணங்கும்போது, "நான் சிவசேவை செய்யக்கூடிய

மனத் தைரியத்தைத் தா” என்றுதான் வேண்டுவார். அசுரர்கள் பயன்மிக்க வரங்களை வேண்டுவர். பயன் கருதிச் செய்வதே தவமாகும். வீட்டில் இருந்து கொண்டு மிக்க மகிழ்வுடன் சிவசேவை செய்யும் சிவனடியார்களையே சிவன் விரும்புவார். அவர்களுக்குத்தான் காட்சியும் கொடுப்பார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**139) ஒன்று உண்டு இல்லை என்ற அறிவு ஒளித்தும்**

“சிவனடியார்களே, உங்கள் சமூகத்தை ஒருமுறை பாருங்கள். எவ்வளவு மக்கள் கூடியிருக்கின்றார்கள். அவர்கள் எல்லோரும் ஒருவனைப் போலவா இருக்கிறார்கள், வாழ்கிறார்கள். இல்லையே. சகோதரங்களிடையிலேயே பல வேறுபாடுகள் உண்டு. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வித்தியாசமான இயல்பு உண்டு. இடது கைப்பெருவிரல் அடையாளத்தை வைத்தே சம்பந்தப்பட்டவரைக் கண்டு பிடிக்கின்றனர். ஒருவரது பெருவிரல் அடையாளம் இன்னொருவருக்கு இல்லை. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் வானில் அந்தரத்தில் திரிகின்றன. அவை விழுந்தால் என்னாகும். விஞ்ஞானிகள் ஒரு கருத்தைக்கூற மெய்ஞ்ஞானிகள் அது கடவுளின் ஆணை என்கின்றனர். விஞ்ஞானிகள் கூறுபவை எப்போதும் நடைபெறுவதில்லை. வைத்தியாகளால் சில நோய்களை முற்றாகக் குணப்படுத்த முடியவில்லை. உயிர் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. பூமியில் நடைபெறும் நிகழ்வுகளை ஏன் உண்டாகிறது என்று அறிய முடிவதில்லை. இப்படிப் பலவற்றைச் சொல்லலாம். இதிலிருந்து என்ன தெரிகிறது. அனைத்திற்கும் ஆதாரமாக முழுமுதற் பொருள் ஒன்று உள்ளது என்பதைத் தமது அறிவால் உணர்ந்து கொள்ள முடியாவர்களுக்குச் சிவன் எப்போதும் எட்டாதவனாகவே இருப்பான். ஒருவர் தனது பெண்பிள்ளைக்குப் பேசிவரும் மாப்பிள்ளைகளுக்கு ஒவ்வொரு பிழை கூறித் தட்டிக் கழித்துக் கொண்டிருந்தார். தனது தகுதிக்கேற்ற மாப்பிள்ளை வருவான். அதன் பின் திருமணத்தை முடிப்பேன் என்று சொல்வார். இப்படிப் பல மாப்பிளைகளைத் தட்டிக் கழித்துவிட்டார். ஒவ்வொரு மாப்பிள்ளையையும் குறை கூறும்போது அவரது மகள், “அப்பா சகலதும் அறிந்தவர் அவர் சொல்வது சரி” என்பாள். அவருக்கு மகிழ்ச்சி. நல்ல மாப்பிள்ளை என்று அவர் ஒருவனைத் தெரிந்தெடுத்தபோது அவரது மகள் தனது காதலனுடன் சென்று விட்டாள். ஒரே வீட்டில் இருந்து கொண்டு தனது மகளின் செயலை அறியாத தந்தையைப் போலவே பலர் வாழ்கின்றனர். இவர்கள் அறிவற்றவர்கள். உலக நடைமுறையை அறியாதவர்கள். இப்படியானவர்களால் எப்படிச் சிவனைக்

கண்டு கொள்ள முடியும்? இயற்கையை உற்று நோக்கினால் எல்லாம் புரியும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**140) பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்**

**141) ஒளிக்கும் சோரனைக் கண்டனம்**

**142) ஆர்மின் ஆர்மின் நாள் மலர்ப் பிணையலில்**

**143) தாள் தளை இடுமின்**

**144) சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்**

**145) பற்றுமின் என்றவர் பற்று முற்று ஒளித்தும்**

"சிவனடியார்களே, முன்பு தோன்றிய நூல்களும், இப்போது தோன்றிக் கொண்டிருக்கும் நூல்களில் சிலவும் சிறுசிறு தெய்வங்களை வசப்படுத்துவது எப்படி என்பதற்கான வழிமுறைகளைச் சொல்கின்றன. இவை வியாபார நோக்கத்திற்காக எழுதப்படுபவை. அவற்றில் கூறியதுபோலக் கள்வனைக் கண்டு பிடிப்பது போன்று கடவுளைக் காணுவதற்காகப் பெருந் தொகைப் பணத்தைச் செலவு செய்து பூசைகள், விழாக்கள், அன்னதானங்கள் செய்கிறார்கள். பல்வேறு அலங்காரங்களை அச்சிறு தெய்வங்களுக்குச் செய்கிறார்கள். இதெல்லாம் பொய். இப்படிச் செய்வதன் மூலம் சிவனைக் காண முடியாது. மனதில் பற்றுக்கள், பாசம் உள்ளவர்கள் அப்பற்றுக்களால் உண்டாகும் அவாவினால் இவற்றையெல்லாம் செய்கின்றனர். இவர்களின் நோக்கம் பணம் சம்பாதிப்பதேயாகும். இப்படியானவர்களின் பின்னணியை ஆராய்ந்து பாருங்கள். இவர்களின் சீடர்கள் இவர்களுக்காக என்னென்ன செய்கிறார்கள் என்று தெரியும். இரவானால் மதுவும் மாமிசமும் அருந்துகிறார்கள். என்னென்னவோவெல்லாம் செய்கின்றனர். தான் நோயைத் தீர்ப்பதாக அண்மையில் ஒருவர் அறிவித்தார். நடக்கமுடியாத ஒருவனைத் தூக்கிவந்து மேடையில் இருத்தினார்கள். பூசாரி பூசை செய்தான். சில மணி நேரங்களின் பின் அவன் எழுந்து ஓடினான். இன்னொருவன் ஊமையொருவனைக் கொண்டு வந்து இருத்தினான். அவனும் பூசையின் பின் பேசத் தொடங்கினான். அதைக் கண்ட ஒருவர் ஊனமுற்றிருந்தால் நடக்க முடியாத தனது மகனை அழைத்து வந்தார். அவன் பூசைகள் செய்தான்.

பலமணி நேரமாகியும் அவன் நடக்கவில்லை. எனது தெய்வத்தை இன்னொருவன் வசப்படுத்திவிட்டான். நாளைக்கு ஆச்சிரமத்திற்கு அழைத்து வாருங்கள் என்று கூறிவிட்டுச் சென்று விட்டான். ஆடம்பரமான விழாக்களோ, பூசைகளோ சிவனுக்குத் தேவையில்லை. அமைதியாக இருந்து மனதுள் ஐந்தெழுத்தை ஓதினால் போதும். சிவனைத் தவிர மற்றெந்தத் தெய்வமும் வரமளிக்கமாட்டாது. இதை நம்புங்கள். தற்பொழுது விதம் விதமான பூசைகளையும், ஆராதனைகளையும் செய்கின்றனர். மனிதர் தெய்வமாக முடியாது என்பதை நினைவில் வைத்திருங்கள்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**146) தன்நேர் இல்லோன் தானே ஆனதன்மை**

**147) என்நேர் அனையார் கேட்க வந்து இயம்பி**

**148) அறைகூவி ஆட்கொண்டு அருளி**

**149) மறையோர் கோலம் காட்டி அருளலும்**

**150) உளையா அன்பு என்பு உருக ஓலம் இட்டு**

"சிவனடியார்களே, மாணிக்கவாசகர் சிவபெருமான் அந்தண வேடந்தாங்கி வந்து தன்னை எவ்வாறு ஆட்கொண்டார் என்று கூறுகிறார்; "சிவனே உனக்கு நிகரானவன் நீயே. உன்னோடு எவரையும் ஒப்பிட முடியாது. தன்னில் தானாகிய நீ என்போன்ற அடியார்கள் உய்தற்பொருட்டு அந்தண வேடந்தாங்கி வந்து உனது மகிமையை எனக்கு காட்டி என்னை ஆட்கொண்டாய். என்னை நாடிவந்து என்னையறியாமல் வலிந்து இழுத்து ஆட்கொண்டதை வியப்புற்று நான் மகிழ்ந்து அன்பினால் எலும்பு உருகும்படி ஓலமிட்டு அழுதேன்" என்கிறார். ஒருவரின் பக்தியின் நிலையை அறிந்து அவரை ஆட்கொள்ளச் சிவன் நேரிலே வருவான். நேரில் வந்து தன்னைக் காட்டித் தனது பெருமைகளை உணர்த்தி அவனை ஆட்கொள்வான். இது நாயன்மார்களது வாழ்க்கையில் நடைபெற்றது. அன்போடு சிவனை வழிபட்டால் அவன் எமக்கு ஏற்பட இருக்கும் துன்பங்களை நீக்குவான். என்றும் உதவியாக இருப்பான். கதிரேசன் ஒருநாள் வெளியூருக்கு இனத்தவர்களுடன் செல்லவிரும்பினார். அவருடன் அவரது மனைவியும் செல்ல இருந்தாள். அன்று அவர்கள் புறப்படும்போது ஒரு சிவனடியார் அவர்களது

வீட்டுக்கு வந்து பசிக்கிறது என்றார். அந்த வார்த்தையைக் கேட்டதும் அவரது மனைவி உடனே சமையலறைக்குச் சென்று சமைக்க ஆரம்பித்தாள். வேலையாட்கள் யாரும் இல்லை. அடுப்பை மூட்ட மூட்ட அது அணைந்து கொண்டிருந்தது. அதனால் இனத்தவர்கள் அவரையும் மனைவியையும் விட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். அதன் பின் சமைத்துச் சிவனடியாருக்குக் கொடுத்துவிட்டு உண்ட அவரை வழியனுப்ப வந்தபோது ஒரு வாகனம் வந்து அவர்களின் அருகே நின்றது.

சிவனடியார், "வாருங்கள் செல்வோம். இவன் எனது பக்தன். சீடன். உங்களைத் திருமண வீட்டில் கொண்டு சென்று விடுகிறோம்" என்றார். கதிரேசன் சிவனை நினைத்துக் கொண்டு வாகனத்தில் ஏறித் திருமண வீட்டை அடைந்தார். அங்கு அவருக்கு முன் சென்ற இனத்தவர்களைக் காணவில்லை. விசாரித்தபோது அவர்கள் வந்த வாகனம் விபத்துக்கு உள்ளானதால் காயப்பட்டவர்களைக் கொண்டு வைத்தியசாலைக்கு அவர்கள் சென்றுவிட்டனர் என்று தெரிய வந்தது. அவரது மனைவி சொன்னாள்; "அச் சிவனடியார் வந்துதும் எனக்கு நிலைமை புரிந்தது. எம்மைத் தடுக்கத்தான் அவர் வந்திருக்கிறார் என நினைத்தேன். சிவன் எம்மோடு எப்பவும் கூட இருப்பார். அவருக்கு நடக்கப் போவது தெரிந்துதான் சிவனயாராக வந்தார்" என்றார்.

"சிவனே உனது திருவிளையாட்டிற்கு அளவே இல்லை. என்னைக் காக்கச் சிவனடியாராக வந்தாய். அதை நினைக்க எனது இதயம் கனக்கிறது. எலும்புகள் உருகுகின்றன என்றவர்" என்றவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**151) அலைகடல் திரையின் ஆர்த்து ஆர்த்து ஓங்கித்**

**152) தலை தடுமாறா வீழ்ந்து புரண்டு அலறிப்**

"சிவபெருமான் தன்னை ஆட்கொண்டபோது தனது மனம் எவ்வாறு இருந்தது என்று மாணிக்கவாசகர் கூறுகிறார்; "அலை வீசுகின்ற கடலில் எழும் ஓசையாக எனது மனம் அலைகள் போலத் துள்ளிக் குதித்து ஓலமிடுகின்றது. அந்த அலை என்னை உருட்டிப் பிரட்டித் தலைகீழாகப் புரட்டி விளையாடுகிறது. அதனால் நான் மகிழ்வுடன் கத்துகிறேன், ஓடுகிறேன், பாடுகிறேன். பித்தனைப்போல உழறுகிறேன். என்னை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் மேலும் இவ்வாறும் கூறுகிறார்"

**153) பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து**

**154) நாட்டவர் மருளவும் கேட்டவர் வியப்பவும்**

**155) கடக்களிறு ஏற்றாத் தடம் பெரு மதத்தின்**

**156) ஆற்றேன் ஆக அவயவம் சுவை தரு**

**157) கோல் தேன் கொண்டு செய்தனன்**

"சிவனடியார்களே, மாணிக்கவாசகர் தனது அனுபவத்தை இவ்வாறு சொல்கிறார்; "பித்துப் பிடித்தவர் போல மயக்கம் கொண்டும், வெறி பிடித்தவர் போல களியாட்டம் காட்டியும், என்னையறியாது எனது பேருணர்வு என்னை ஆட்டிப் படைத்தது. எனது செயல்களைப் பார்த்த ஊரவர் திகைத்தனர், திகிலடைந்தனர், சிலர் வியப்படைந்தனர், மதம் பிடித்த ஆண் யானை தனது பாகன், தன்மீது ஏறவிடாது அவனைத் தடுப்பதுபோல என்னுணர்வுள் எல்லாவற்றையும் சொல்கின்றன. எனது நாக்கு கொம்புத் தேனில் ஊற வைத்ததுபோல இனிக்கிறது." இவ்வாறு மாணிக்கவாசகர் கூறுகிறார். இது இயல்பானதொன்று. சில மாதங்களுக்கு முன் சிவன் கோவிலில் சிவனை வணங்கிக் கொண்டிருந்த ஒருவர் திடீரென்று பலமாக ஓலமிட்டார். பின்பு ஆடினார், பாடினார், ஓடினார், எரிந்து கொண்டிருந்த கற்பூரத்தைத் தனது கைகளால் அள்ளி மேல் முழுவதும் பூசினார். தான் கொண்டு வந்த இரும்புக் கம்பியால் தனது நெஞ்சில் அடித்தார். இவற்றையெல்லாம் நீங்கள் நேரில் கண்டீர்கள். இவ்வாறு அவர் எல்லாக் கோவில்களிற்கும் செல்வார். கற்பூரத்தை அள்ளிய கைகள் வெந்திராது. இரும்புக்கம்பியால் தாக்கிய வலி அவருக்கு இராது. அவர் சுயநினைவடைந்த பின்பு அவரைக் கேட்டால் அவர் சிரிப்பாரே தவிர வேறு எதுவும் பேச மாட்டார். அவரைப் பார்த்தபின் மாணிக்கவாசகரும் அவ்வாறுதான் நடந்திருப்பாரென எண்ணத் தோன்றுகிறது."

**158) ஏற்றார் மூதூர் எரிநகை எரியின்**

**159) வீழ்வித்து ஆங்கு அன்று**

**160) அருள் பெரும் தீயின் அடியோம் அடிக்குடில்**

**161) ஒருத்தரும் வாழாமை ஒடுக்கினன்**

"சிவனடியார்களே, முன்பு சிவபெருமான் வானில் மூன்று கோட்டைகளைக் கட்டி அதில் ஏறி மக்களைத் துன்பப்படுத்திய அரக்கர்களைப் புன் சிரிப்பால் எரித்து அழித்தவன். இதன் மூலம் தன்னிடம் வரங்களைப் பெற்றபின் தாம் தாம் வலியவர்கள் என்று அட்டகாசம் செய்த அசுரர்களை முற்றாக அழித்தவன். ஒருவன் சிறந்த கொடையாளியாக இருந்தாலும் தனது பிற்காலத் தேவைக்காகப் பணத்தையும், பொருட்களையும் ஒதுக்கி வைத்திருப்பான். இல்லாவிட்டால் தன்னால் உழைக்க முடியும் என்ற தைரியத்தில் தான தர்மம் செய்வான். இது ஒரு சராசரி அறிவுள்ள மனிதனின் நிலை. எல்லாவற்றையும் படைத்துக் காத்து அருளும் சிவன் வரம் கொடுக்கும்போது அவர்களின் நிலை தெரியாமலா கொடுக்கின்றான். ஒருவன் ஒரு பொருளை ஆக்கினால், அதை அழிக்கவும் அவனால் முடியும் என்பதைப் பலர் உணர்வதில்லை. அசுரர்கள் பலர் இந்நிலையால் தான் அழிந்தனர். இதை உணராது ஏனைய அசுரர்களும் இந்நிலைக்கே உட்பட்டு அழிந்தனர். ஆனால் அவனுடைய அடியவர்களை அவன் எப்போதும் துன்பங்களில் இருந்து காப்பான். அடியவர்களுக்குப் பிறப்புக்கள் தோறும் ஒட்டிவரும் மலத்தை அவன் தனது ஞான அக்கினியால் சுட்டெரிப்பான். பின் அவர்களைத் தன்னோடு சேர்த்துக் கொள்வான். மார்க்கண்டேயருக்கு விதிப்படி பதினெட்டு வயது. பதினெட்டு வயது முடிந்ததும் அவரைக் கவர வந்த யமனைக் காலால் உதைத்துக் கொன்றவன் சிவன். அப்படியான சிவன் தனது நிலையறிந்து பல பிறப்புக்கள் தோறும் ஒட்டிவந்த மலத்தை அகற்றித் தன்னுடன் சேர்த்துக் கொண்டான்" என்று மாணிக்கவாசகர் கூறுகிறார்.

**162) தடம் கையின் நெல்லிக்கனி எனக்கு ஆயினன்**

**163) சொல்லுவது அறியேன் வாழி முறையோ**

**164) தரியேன் நாயேன் தான் எனச் செய்தது**

**165) தெரியேன் ஆ ஆ செத்தேன் அடியேர்க்கு**

**166) அருளியது அறியேன் பகுதியும் ஆரேன்**

**167) விழுங்கியும் ஒல்லகில்லேன்**

“சிவனடியார்களே, தன்னைச் சிவன் ஆட்கொண்ட விதம் பற்றி மேலும் மாணிக்கவாசகர் கூறுகிறார்; “உள்ளங்கையில் நெல்லிக்கனிபோலச் சிவன் எனதுள்ப் பிரசன்னகமாகி இருந்தான். நான் அவனைக் கண்குளிரக் கண்டேன். உள்ளங்கையில் நெல்லிக்கனி இருந்தால் நன்றாகப் பார்க்கலாம். சிவன் எனக்கு முழுமையாகக் காட்சி தந்தான். சிவப் பேரின்பத்தை நான் அனுபவித்துக் கொண்டிருந்தேன். அதை அனுபவிக்க முடிந்ததே தவிர வாயால் கூற முடியவில்லை. அப்படிப்பட்ட சிவனை வாழ்த்துகிறேன். என்னை நீ ஆட்கொண்டது முறையானதா அல்லதா என்றுகூட நானறியேன். அற்பனான எனக்கு எதுவும் விளங்கவில்லை. நடப்பவை எதுவும் தெரிந்தாலும் விளங்கவில்லை. உன்னைக் கண்டதும் என்னை இழந்து விட்டேன். ஆ ஆ நான் இறந்துவிட்டேனோ என்ற எண்ணமும் மனதில் எழுந்தது. நீ என் அருகில் வந்து என்னை ஆட்கொண்டு அருள் புரிந்தது எனது அறிவுக்கு எட்டவில்லை. எண்ணி எண்ணிப் பார்க்கிறேன். நினைவுகள், உணர்வுகள் மரத்து விட்டன போலும். உனது திவ்விய ஒளி பொருந்திய தோற்றம் எல்லாவற்றையும் மறைத்து விட்டது. நினைக்க நினைக்க அது தெவிட்டவில்லை. நினைத்துக் கொண்டே இருக்க வேண்டும் போல இருந்தது. பார்த்துக் கொண்டே இருந்தேன். கண்கள் இனித்தன. உணர்வுகளும் இனித்தன. அந்தரத்தில் பறப்பது போன்ற உணர்வு” என்கிறார். சிவனை அடைந்தவர்களுக்குச் சிவனிடமிருந்து வருகின்ற பேரானந்தத்தை விளக்கச் சொற்கள் இராது. அதைச் சொற்களில் அடக்க முடியாது. மனித உணர்வுகள் அடங்கிச் சிவஉணர்வு தோன்றும்போது மனிதன் சிவவுலகில் சஞ்சரிப்பான். சிவ உணர்வுகளை வெளிப்படுத்த சொற்களால் முடியாது. ஒரு காதலன் தனது அழகிய காதலியைப் பல நாட்களுக்குப் பின் சந்திக்கிறான். அவர்களுக்குள் உண்டான இன்பத்தைச் சொற்களால் கூற முடியுமா? ஒரு தாய் தனது குழந்தைக்குப் பாலூட்டுகின்றாள். அந்த நேரம் அவளுக்குள் உண்டாகும் உணர்ச்சிகளைச் சொற்களால் வெளிப்படுத்த முடியுமா…? அதுபோலத்தான் பேரின்பப் பொருளான சிவனைக் கண்டு களித்ததை மாணிக்கவாசகரால் வெளிப்படுத்தமுடியவில்லை”

அதனால் பலவாறு தடுமாறும் மாணிக்கவாசகர் இவ்வாறு சொல்கிறார்.

**168) செழும் தண் பால்கடல் திரை புரைவித்து**

**169) உவாக்கடல் நள்ளும் நீர் உள் அகம் ததும்ப**

“சிவனடியார்களே, மாணிக்கவாசகர் அனுபவிக்க முடியாத மகிழ்வின் உச்சியில் நின்று சொற்கள் மனதுள்ப் பிறக்காத நிலையிலும் இவ்வாறு சொல்கிறார்; “செழுமையும் குளிர்ச்சியும் பொருந்திய பாற்கடலில் இருந்து கிளம்பும் அலைகள் போன்றது சிவனிடத்திலிருந்து வரும் பேரானந்தம். பௌர்ணமி தினத்தன்று கடலின் நீர் உயர்ந்திருப்பதுபோன்று எனது உள்ளத்திலும் ஆனந்தம் பொங்கி நிறைந்திருக்கிறது” என்கிறார். அவரால் அந்த அனுபவத்தைச் சொல்ல முடியவில்லை. சாதாரணமாக எமக்கு வரும் மகிழ்வின்போது நாம் தடுமாறுகின்றோம். அந்த நேரம் உணர்ச்சி வசப்பட்டுப் பேசமுடியாமல் தடுமாறுகிறோம். அந்தநிலையில் சிவனைக் காண வேண்டுமென்று பல காலம் விரும்பித் தொழுது கொண்டிருந்த மாணிக்கவாசகருக்குத் திடீரென்று சிவன் காட்சி கொடுத்து ஆட்கொண்டால் எப்படி இருக்கும். அப்போது பேச முடியுமா..? அந்த நிலையில் மாணிக்கவாசகர் சொற்களைத் தேடித் தடுமாறுவது புரிகிறது. அது இயல்பானது. எவ்வளவுதான் திடமான மனதிருந்தாலும், சிலர் தாங்கமுடியாத பெரும் மகிழ்வு திடீரெனக் கிடைக்கும்போது தமது சுயநினைவை இழப்பார்கள். சிலர் இறந்தும் விடுவார்கள். அதை நினைவுபடுத்துவதுபோல மாணிக்கவாசகர் முன்னைய பாடலில் தான் இறந்து விட்டேனோ என்று நினைத்ததாகக் கூறுகிறார். மாணிக்கவாசகரது அனுபவம் புதியது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**170) வாக்கு இறத்து அமுதம் மயிர்க்கால் தோறும்**

**171) தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன் தழை**

**172) குரம்பை தோறும் நாய் உடல் அகத்தே**

**173) குரம்பை கொண்டு இன்தேன் பாய்த்தி நிரம்பிய**

“சிவனடியார்களே, மேலும் மாணிக்கவாசகர் சொல்கிறார்; “சொல்லில் அடங்காத அமிர்த சொரூபமாகிய ஆனந்தம் எனது உடலில் உள்ள மயிர்க்கால் தோறும் ததும்பி வழியும்படி சிவன் செய்தான். வினையை உடைய எனது தசையினால் கொழுத்த உடம்பு முழுவதும் தகுதியற்றது. அதைச் சிவன் இருப்பிடமாகக் கொண்டு சிவானந்தம் என்னும் தேனைச் சிவன் பொழிந்தான்.” என்கிறார் மாணிக்கவாசகர். இறைவன் தரும் பேரின்பத்தைச் சொற்களால் விளக்க அவரால் முடியவில்லை. திருவாசகத்தின் மூலம்

சிவனடியார்களை உருகவைத்த மாணிக்கவாசகரைச் சிவன் தனது சிவானந்தத் தேனால் குளிப்பாட்டி அவரைத் திக்குமுக்காட வைத்து அவரது செயலை அறுக்கிறார். திருவாசகம் என்ற தேனைச் சிவனடியார்களுக்குப் பருகக் கொடுத்த மாணிக்கவாசகர் சிவானந்தத் தேனால் தன்னையும், தனது செயல்களையும் இழந்து பரிதவிப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இது எமக்கு ஓர் அனுபவமாகும்."

**174) அற்புதம் ஆன அமுதம் தாரைகள்**

**175) எற்புத் துளை தொறும் ஏற்றினன் உருகுவது**

"சிவனடியார்களே, அவரது அனுபவங்களை அவரால் முழுமையாகச் சொல்ல முடியவில்லை. அதை விபரிக்கச் சொற்கள் வராமையால் அவர் தடுமாறுகிறார். அவர் இவ்வாறு சொல்கிறார்; "வியக்கத்தக்க அமிர்த ஊற்றுக்களை எனது உடம்பிலுள்ள எலும்பின் துவாரங்களிலெல்லாம் சிவன் ஏற்றி வைத்தான். அதனால் எனது உடல் உருகத் தொடங்கியது."

**176) உள்ளம் கொண்டு ஓர் உரு செய்தாங்கு எனக்கு**

**177) அள் ஊறு ஆக்கை அமைத்தனன் ஒள்ளிய**

**178) கன்னல் கனிதேர் களிறு எனக் கன முறை**

**179) என்னையும் இருப்பது ஆக்கினன் என்னில்**

"சிவனடியார்களே, மாணிக்கவாசகர் தனது உணர்ச்சிகளைப் பாடல்களில் வெளிப்படுத்துவதைப்போன்று வேறொருவரால் வெளிப்படுத்த முடியாது. அப்படிப்பட்ட மாணிக்கவாசகர் சிவனைக் கண்ட பேரின்பத்தால் கசிந்து உருகுகிறார். மனதைக் கொணடு ஓர் உருவத்தைச் செய்தாற்போல என்னிடம் அன்பு கசிந்து ஊறும் உடலைச் சிவன் செய்தருளினான். யானையானது கரும்பையும், விளாம்பழத்தையும் தேடுவது போன்று தகுதியற்ற என்னைச் சிவன் பேரானந்தத்தில் நிலைநிறுத்தி அதில் திளைத்திருக்கச் செய்தான்" என்கிறார்.

**180) கருணை வான்தேன் கலக்க**

**181) அருளொடு பரா அமுது ஆக்கினன்**

**182) பிரமன் மால் அறியாப் பெற்றியோனே**

சிவனடியார்களே, மாணிக்கவாசகர் மேலும் இவ்வாறு கூறுகிறார்; "சிவஞானம் என்னும் தேனில் நிலைத்திருந்து நான் அமுத சொரூபம் ஆகும்படி சிவன் செய்தருளினான். பிரம்மாவுக்கும் திருமாலுக்கும் எட்டாத பேரன்புமிக்க சிவன் எனக்கு எட்டியவனனாது புதுமையிலும் புதுமை என்கிறார்" சுந்தரமூர்த்தி சுவாமிகள்.